# தமிழர் பொருணமியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/=

இதழ் - 75

15.09.2024




# ஜனாதிபதி தேர்தலும் பொருளாதாரமும்...




காணாமல் ஆக்கப்படும் குளங்கள் 08




பத்தாவது வருட பூர்த்தியை கொண்டாடும் ஜீவ ஊற்று – அன்பின் கரங்கள் நிறுவனம் 12



கேள்விக் குறியாகும் மனித வளங்கள் 14

# அதிகரித்துச் செல்லும் விபத்துகளும் தவிர்ப்பதற்கான பொறி முறைகளும்



வேதநாயகம் தபேந்திரன்

**எமது தாயகத்தின் பொருளாதாரத்தைப் பெருமளவுக்குச் சீரழிக்கும் ஒன்றாக விபத்துகள் உள்ளன. இதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றைத் தெரிந்து கொண்டு நாம் எம்மையும் பாதுகாத்துக் கொண்டு ஏனையவர்களையும் பாதுகாப்பது எமது கடமையுமாகும். தமிழர் பொருண்மிய உயர்வுக்கு இவை தொடர்பான முன்னறிவு, விதிகளைக் கடைப்பிடித்தல் இன்றியமையாததும் ஆகும்**



தாயகத்தில் குறிப்பாக வட மாகாணத்தில் வாகன விபத்துகளால் இறப்போர், காயப்படுவோர், ஊனமுறுவோர் எண்ணிக்கை அதிகரித்துச்செல்வதை நாளாந்தம் காணுகின்றோம்.

ஒருவர் இறக்கும்போது அக்குடும்பத்திற்கு ஏற்படும் பாதிப்பு பாரதூரமானதாக இருக்கும். அதிலும் குஞ்சு குறுமனுள்ள பிள்ளைகள் உள்ள குடும்பத்தின் தலைவர் இறக்கும் போது அந்தக் குடும்பத்தின் தலைவிதி தலைகீழாக எழுதப்பட்டு விடும். மன உளைச்சலால் நோய்வாய்ப்பட்டு இறப்போர் தொகையும் அதிகம். இது மறைமுக இறப்புகள்.

அது போல காயமுறுதல், ஊனமுறுதல் போன்றவற்றால் மருத்துவத்துறைக்கு ஏற்படும் சுமைகளும் அதில் பாதிக்கப்பட்டவருக்கும் அக் குடும்பத்திற்கும் ஏற்படும் சுமைகளும் அதிகம்.

**விபத்துக்கான காரணங்கள் .**

01. வீதிப் போக்குவரத்து விதிகளைச் சரிவரத் தெரிந்து வைத்திருக்காமை, கடைப்பிடிக்காமை.

02. மது போதையில் வாகனம் செலுத்துதல். கைத்தொலைபேசியைக் கதைத்துக் கொண்டே வாகனம் ஓட்டுதல். போதுமான ஓய்வு இநித்திரை கொள்ளாமல் வாகனம் ஓட்டுதல். மிதமிஞ்சிய வேகத்தில் ஓட்டுதல்.

03. பழுதடைந்த, ரயர் தேய்ந்த வாகனங்களை ஓட்டுதல்.

04. குறிப்பாக ஒரு வாகனத்தை வலது புறமாகத் திருப்புவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் எவை என்பது தொடர்பான தெளிவு இன்மை.

05. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதலில் மிகவும் சரியான இறுக்கமான விதிகளைக் கடைப்பிடிக்காமை.

06. போக்குவரத்துப் பொலிசார் இலஞ்சம் வாங்கிக் கொண்டு குற்றங்களைக் கண்டு கொள்ளாமல் விடுதல் என்ற குற்றச்சாட்டு


A motorcycle-car collision in Colombo. Photo credit: Sri Lanka Police

**விபத்துகளைத் தடுப்பதற்கான பொறிமுறைகள்.**

01. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைமையில் மிகவும் நேர்மையான இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றுதல். மாவட்ட மட்டத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க அனுமதிக்கப்பட்டவர்களிலிருந்து எழுமறாகத் தெரிவு செய்யப்படுபவர்களை வேறு ஒரு பரீட்சகர் பரிசோதிக்க வழி செய்தல்.



02. போக்குவரத்து விதிகளை எழுத்துப் பரீட்சை மூலமாக நிறைவேற்றுபவர்களுக்கு வாய் மொழிப் பரீட்சை மூலமாகவும் மீளவும் பரிசோதித்தல். சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றவர்களிலிருந்து எழுமாறாகத் தெரிவு செய்யப்படுபவர்களில் அவ்வப்போது பரிசோதனைகளை மேற்கொள்ளல்.

03. வாகனத்தை வீதியில் வலது, இடது புறமாகத் திருப்புவதற்கு எவ்வளவு தூ ரங்களில் சிக்னல் போடுதல் வேண்டுமென்ற தெளிவைச் சரியாகக் கொடுத்தல். எமது பிரதேசங்களில் பெரும்பாலானவர்கள் வாகனத்தைத் திருப்பும் போதே சிக்னல் போடுகின்றனர். அதனால் வரும் விபத்துகளே அதிகம். அதிலும் குறிப்பாக வலது புறமாக வாகனத்தை எவ்வாறு திருப்புதல் வேண்டுமென்ற அறிவு பலருக்கு இல்லை.

04. மோட்டார் சைக்கிளில் செல்லும் ஒருவர் வலது புறமாகத் தனது வாகனத்தைத் திருப்புவதாயின் 100 மீற்றர் தூரத்திற்கு முன்பாக வலது பக்கத்துக்குரிய சிக்னலைப் போட வேண்டும்.

மோட்டார் சைக்கிளின் வலது புறக் கண்ணாடியை பார்த்துப் பாதுகாப்பான நிலையை உறுதி செய்தல் வேண்டும். அது போல வீதியின் முன் புறத்தையும் பார்த்துப் பாதுகாப்பான நிலையை உறுதி செய்து கொண்டு திரும்பும் இடம் வருவதற்கு 25 மீற்றர் தூரம் முன்பாக வீதியின் மத்திய புறத்திற்குச் செல்லுதல் வேண்டும்.

பாதுகாப்பான நிலையைக் கருத்தில் கொண்டு வலது புறமாகத் திரும்புதல் வேண்டும். எதிர்ப் புறமாக வாகனங்கள் வருமாயின் வீதியின் நடுப்பகுதியில் காலை ஊன்றிக் கொண்டு பாதுகாப்பான நிலை வரும் வரையில் நிற்றல் வேண்டும். வந்ததும் திரும்புதல் வேண்டும்.

05. வலது புறமாகத் திரும்புவர்களில் பலர் வீதியின் இடது கரையோரமாக வாகனத்தை நிறுத்திக் கொண்டு திடீரென வலது புறமாகத் திரும்ப முற்படுவதை அவதானித்து உள்ளேன். இதனால் விபத்துக்கு உள்ளாவரே அதிகம்.

06. போக்குவரத்துப் பொலிசார் ஒரு சாரதிக்குக் குற்றப்பத்திரம் எழுதும் போது போக்குவரத்து விதி மீறல் எவ்வாறு நிகழ்கின்றது. அதை எவ்வாறு செய்யக் கூடாது. சரியான போக்குவரத்து முறை எது என்பது தொடர்பாகச் சரியான தகவலைப் பெரும்பாலும் வழங்குவதில்லை.

அதனால் சாரதிகள் திருந்திக் கொள்ள வாய்ப்புக் கிடைப்பதில்லை.

06. போக்குவரத்துப் பொலிசார் காலத்துக்குக் காலம் சரியான போக்குவரத்து விதிகள் எவை? குற்றங்களைத் தடுப்பது எவ்வாறு என்பதைச் சொல்லிக் கொடுத்தல் வேண்டும். அலுவலக மட்டத்தில் கிராம மட்டத்தில் இதனைத் தெளிவு படுத்த வேண்டும்.

07. இரவில் வீதிக் கரையோரம் வாகனம் நிறுத்தி வைக்கப்படும் போது நிறுத்தும் வெளிச்சம் இடுவதனை உறுதி செய்தல்.

08. அரச – தனியார் பஸ்கள் போட்டிக்கு ஓடுவதனை கண்காணித்து முதல் குற்றத்தின் போது சாரதி அனுமதிப்பத்திரத்தை ஒரு மாதத்துக்குத் தற்காலிகத் தடை விதித்தல். மீள மீள குற்றம் புரிந்தால் முற்றாக நிறுத்துதல்.

09. வீதியை கடக்கும் நடைபாதை வெள்ளைக் குறியீடு தொடர்பான அறிவு குறைவு. வீதியின் இரு புறமும் 100 மீற்றர் தூரத்தில் வாகனம் இருக்கும் போது கைகளால் நிறுத்துமாறு சைகை காட்டி விட்டுக் கடத்தல் வேண்டும்.

குறிப்பாக நடைபாதைக் அடையாளத்தின் இரு புறமும் 25 மீற்றர் தூரத்தில் பாதை சாரிக்குரிய பாதுகாப்பான பிரதேசம் எதுவென குறியீடு இருக்கும். அதனை அவதானித்து அதற்கு வெளியே வாகனங்கள் வரும் போது நாம் பாதையைக் கடக்கப் போகிறேன் எனக் கைகளால் சைகை காட்டி விட்டுக் கடப்பது பாதுகாப்பான முறை.

10. வீதியில் வலது புறமாகச் சிக்னல் போட்டு விட்டு இடது புறமாகத் திரும்பும் சிலருண்டு. அதாவது வேறு ஒரு யோசனையில் வாகனத்தைச் செலுத்திக் கொண்டு மாறித் திரும்புதல். அதனால் முன்னே செல்லும் வாகனம் தொடர்பாக எப்போதும் விழிப்பாக இருங்கள்.

11. வீதியில் வாகனம் ஓட்டும் போது முழுக்கவனமும் வீதியையும் போக்குவரத்து விதிகளையும் நினைவில் வைத்துக் கொள்ளல் வேண்டும்.

எமது தாயகத்தின் பொருளாதாரத்தைப் பெருமளவுக்குச் சீரழிக்கும் ஒன்றாக விபத்துகள் உள்ளன. மேலே கூறப்பட்ட விடயங்கள் போல இன்னுமின்னும் அதிக காரணங்கள் உண்டு.

அவற்றைத் தெரிந்து கொண்டு நாம் எம்மையும் பாதுகாத்துக் கொண்டு ஏனையவர்களையும் பாதுகாப்பது எமது கடமையுமாகும்.

தமிழர் பொருண்மிய உயர்வுக்கு இவை தொடர்பான முன்னறிவு, விதிகளைக் கடைப்பிடித்தல் இன்றியமையாததும் ஆகும்.



மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0777304010 / 0702675575

# முட்டை இறக்குமதி?

இலங்கையின் கோழிப்பண்ணை உரிமையாளர்களின் வாழ்வாதாரத்தை சிதைப்பதை நோக்கமாகக்கொண்டுதான் அரசாங்கமும் அதிகாரிகளும் செயற்படுகின்றதா என்ற கேள்வி இக்காலத்தில் வெளிவரும் பத்திரிகை செய்திகளை பார்க்கும்போது எழுகின்றது. நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்து இப்போதுதான் மீண்டு வரும் ஒரு நிலைமை காணப்படுகிறது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக உள்நாட்டு உற்பத்திகளுக்கு ஊக்கத்தை கொடுக்க வேண்டிய அரசாங்கம், அதற்கு மாறாக பொருளாதாரத்தை சீரழிப்பது விளக்க கொண்டு செயல்படுகின்றதா என்று கேள்வி மீண்டும் இந்தியாவிலிருந்து முட்டைகளை இறக்குமதி செய்வது என்ற தீர்மானத்தை அரசாங்கம் எடுத்திருந்த அதன் மூலமாக உருவாகி இருக்கின்றது.

வடக்கு கிழக்கு மட்டுமின்றி நாடு முழுவதிலும் கோழி பண்ணைகளை வாழ்வாதாரமாக கொண்ட பலர் இருக்கின்றார்கள். தென்பகுதியில் பெரிய கோழி பண்ணைகள் பலவும் இருக்கின்றன. முட்டை ஒரு அத்தியாவசிய உணவுப் பொருளாக இருப்பதாலும் மலிவாக கிடைக்கக் கூடியதாக இருப்பதாலும் அதற்கான கேள்வி எப்போதும் இருந்து கொண்டே இருக்கின்றது. உள்நாட்டை பொருத்தவரையில் கேள்வி இருக்கும் அளவிற்கு முட்டைகளை கொடுக்கக்கூடிய நிலைமையில் உற்பத்தியாளர்கள் இருக்கின்றார்கள் என்பது உண்மை.

ஏனைய அத்தியாவசிய உணவுப் பொருட்களுடன் ஒப்பிடும்போது முட்டையின் விலை சாதாரண மக்களாலும் கொள்வனவு செய்யக்கூடிய நிலையில் தான் இருக்கின்றது. பெரும்பாலும் 40 முதல் 60 ரூபாவுக்கு இடையில் முட்டைகளை வாங்க முடியும். மரக்கறிகள், பால்மா, மீன் மற்றும் இறைச்சி போன்றவற்றுடன் ஒப்பிடும் போது முட்டையின் விலை சாதாரண மக்களுக்கும் வாங்க கூடிய நிலைமையில் இருக்கின்றது என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி முட்டை உற்பத்தியை பாதித்தது என்பது உண்மைதான். கோழி உணவு விலை அதிகரிக்கும் அதற்கு ஏற்பட்ட தட்டுப்பாடும் தான் இதற்கு காரணம். அதற்கு மத்தியிலும் உள்நாட்டில் கோழி பண்ணையாளர்கள் தொடர்ந்து தங்களுடைய தொழிலை செய்து வருகின்றது முக்கியமான ஒரு விடயம்.

உள்நாட்டில் முட்டைக்கு தட்டுப்பாடு ஏற்படுகிறது என்றால் கோழி பண்ணையாளர்களை ஊக்குவிப்பதற்கான செயற்பாடுகளை போதிய அளவுக்கு அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என்பதுதான் அதன் அர்த்தம். அதனை விட கோழி உணவுகளை மானிய விலை வழங்குவதன் மூலம் பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு அரசாங்கம் தீர்வை கொடுத்திருக்க முடியும்.

ஆனால் அரசாங்கம் இது எதனை செய்யாமல் முட்டையை இந்தியாவிலிருந்து கோடிக்கணக்கில் இறக்குமதி செய்வதற்கான திட்டத்தை வகுத்து அதனை செயல்படுத்தியும் வருகின்றது. பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் இயங்கிக் கொண்டு வரும் கோழி பண்ணையாளர்கள் இதனால் மிகவும் மோசமாக பாதிக்கப்படுவார்கள். இது அரசாங்கத்திற்கு புரியாத ஒன்று அல்ல. இதனைத் தெரிந்து இருந்து கொண்டும் அரசாங்கம் இதனை ஏன் செய்கின்றது என்பது தான் இன்று இடம் முக்கியமான கேள்வி!

# பலம் சேர்க்கும் பாசிப்பயறு

**ஆரோக்கியமான உடல் எடைக்கு பாசிப்பயறு முக்கிய உணவு பொருளாகும். உடல் எடை அதிகமாக இருப்பவர்கள் பாசிப்பயறு சாப்பிடுவதன் மூலம் அது அவர்களுக்கு நீண்ட நேரம் பசித்தன்மையை குறைத்து உடல் எடையை பாதுகாக்கிறது.**

க .அமுதன்– கீரிமலை

பயறு வகைகளில் பெரும்பாலும் புரத சத்து, நார்சத்து நிறைந்து காணப் படுகின்றன. பயறு வகைகளில் மிகவும் சிறந்தது பச்சைப்பயறு. இதில் நிறைய அளவு கலோரிகள் காணப்படுகிறன.

பச்சைப்பயறில் புரதசத்து, நார்சத்து, கனிம உப்புக்களும் அதிக அளவில் காணப்டுகிறன. இதில் வைட்டமின் சி, ஏ ஆகியவையும் காணப்படுகின்றன. இரும்புசத்து நிறைந்து காணப்படுவதால் இது உடலுக்கு மிகுந்த வலுவை சேர்க்கிறது.

பொட்டசியம், எலும்புகளுக்கு தேவையான கால்சியம், மாங்கனீசு போன்ற கனிம தாதுக்களும் நிறைந்து காணப்படுகின்றன. உடல் செரிமா னத்திற்கு பாசிப்பயறு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இதில் காணப் படக்கூடிய நார்ச்சத்துக்கள் குடலின் உணவுகளை சீக்கிரமாக செரிமானமாக உதவிகரமாக உள்ளது.

இரத்த அழுத்தத்தை சீராக்க பாசிப்பயறு முக்கிய பங்கு ஆற்றுகிறது. இதயத்தை பாதுகாக்க பாசிப்பயறு உணவுகள் முக்கிய பங்கினை அளிக்கிறது. ஏனென்றால் இதில் காணப்படக்கூடிய ஆன்டி ஆக்ஸி டன்ட்கள் உடம்பில் கெட்ட கொழுப்புகள் சேர்வதை தடுத்து மாரடைப்பு,பக்கவாதம் ஏற்படுவதை முற்றிலுமாக தடுக்கிறது.

ஆரோக்கியமான உடல் எடைக்கு பாசிப்பயறு முக்கிய உணவு பொருளாகும். உடல் எடை அதிகமாக இருப்பவர்கள் பாசிப்பயறு சாப்பிடுவதன் மூலம் அது அவர்களுக்கு நீண்ட நேரம் பசித்தன்மையை குறைத்து உடல் எடையை பாதுகாக்கிறது.

பாசிப்பயறு நோய் எதிர்ப்புசக்தியை அதிக அளவு கொடுக்கிறது. கர்ப்பிணி பெண்களுக்கு பாசிப்பயறு நன்கு சாப்பிடுவதால் அவர்களுக்கு இரும்புசத்து, புரதசத்து, நார்சத்து அதிக அளவு கிடைக்கிறது.

சரும பராமரிப்பில் பாசிப்பயறு முக்கியமாக நிறைய பங்கினை தருகிறது. சருமத்தில் காணப்படக்கூடிய அழுக்குகளை நீக்கி முகம் பொலிவை தருகிறது.

**பலத்துக்கு வலுசேர்க்கும் பயறு**

உடலை வலுவாக்கும் உணவுகளில் பயறு வகைகளுக்கு முக்கியப் பங்கு உண்டு. புரதச்சத்து மிகுதியாக இருப்பதால், பயறு வகைகள் அசைவ உணவுக்கு இணையாகக் கருதப்படுகின்றன.

பொதுவாகப் பயறு வகைகள் உலர்ந்து விதைகளாக மாறுவதற்கு முந்தைய நிலையிலும் சாப்பிட ஏற்றவை தான். ஆனாலும், நன்றாக முதிர்ந்தப் பயறு வகைகளில்தான் குறைவான ஈரப்பதமும் அதிகச் சத்துக்களும் இருக்கும். முளைவிட்டப்பயறு வகைகளில் அதிக அளவு நீர்ச் சத்தும், வைட்டமின் சத்துக்களும் இருப்பதால் பூஞ்சைக் காளான் வளர ஆரம்பிக்கும் வாய்ப்பு உள்ளது. அதனால், பாதுகாப்பாக வைப்பது அவசியம்.

குழந்தைகள் முதல் பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், வயதானவர்கள் என அனைவருக் கும் பயறு வகைகள் அவசியம் தேவை. அதே சமயம், அதிகமாகச் சாப்பிடுவது நல்லது அல்ல. சைவ உணவு சாப்பிடுபவர்கள், தினமும் ஏதேனும் ஒரு வகை பயறை 50 கிராம் எடுத்துக்கொள்ளலாம். இந்தப் பயற்றுனை சுண்டலாக சமைத்துச் சாப்பிடுவது நல்லது!

**எச்சரிக்கை**

ஜீரண சக்திக் குறைபாடு, வயிறு சம்பந்தப்பட்டப் பிரச்னை, சிறுநீரகப் பாதிப்புக் கொண்டவர்கள் சில பயறு வகைகளை குறைவான அளவில் சாப்பிடுவதே நல்லது.

முளைக்கட்டியப் பயறு வகைகளில் 'யூரிக் ஆசிட்' அதிகம் இருப்பதால், மூட்டு வலி (Gout Disease) வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சிலருக்கு வயிற்றுப்போக்கும் ஏற்படலாம். முளைக்கட்டியப் பயறை வெந் நீரில் மிதமாக வேகவைத்துச் சாப்பிட வேண்டும். இதில், நார்ச் சத்து அதிக அளவில் இருப்பதால், சாப்பிட்டதும் நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும்.

எலும்பு வளர்ச்சிக்கும், ரத்த ஓட்டத்துக்கும், வளர்ச்சிக் குறைபாடு உள்ள குழந்தைகளின் தசைகளை வலுவாக்குவதற்கும் ஏற்றது பச்சைப் பயறு. மலச் சிக்கலைப் போக்கும். இதில், புரதம், கலோரி, பாஸ்பரஸ், ஃபோலிக் ஆசிட், பொட்டாஷியம், நார்ச் சத்து ஆகியவை அதிக அளவில் இருக்கின்றன. மாவுச் சத்து, கொழுப்பு, கோலின், பீட்டா கரோட்டின், கால்சியம், இரும்பு, மெக்னீஷியம், தாமிரம், சோடியம் ஆகியவை ஓரளவு இருக்கின்றன. இதய நோயாளிகள், சர்க்கரை நோயாளிகள் சாப்பிடலாம். பொட்டாஷியம், பாஸ்பரஸ் அதிகமாக இருப்பதால், சிறுநீரகப் பாதிப்பு உள்ளவர்கள் தவிர்க்க வேண்டும்.




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 2,00,650 ரூபா.**

**24 கரட் தங்கம் 2,18,850 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




**கேள்வி:** சம்பள அதிகரிப்பு தொடர்பாக பிரதான ஜனாதிபதி வேட்பாளர் அனைவருமே வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றார்கள் அது எந்த அளவுக்கு சாத்தியம்?

**பதில்:** உண்மைதான். தற்போது ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்கள் இடம்பெற்று வரும் பின்னணியில் இந்த சம்பள உயர்வு தொடர்பான வாக்குறுதிகள் மக்களை குழப்பி வருகின்றது என்பது உண்மைதான். தேர்தலின் போது அள்ளி வீசப்படும் வாக்குறுதிகளை முழுமையாக யாருமே நம்புவதில்லை. கடந்த கால அனுபவம் நாட்டு மக்கள் அனைவருக்கும் இருக்கின்றது. தரப்பட்ட வாக்குறுதிகள் முழுமையாக நடைபெற்றது என்பதை தெரிந்து கொண்டு கூட பெரும்பாலான வாக்காளர்கள் தங்களுடைய அபிமான வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதலில் சம்பள உயர்வு குறித்த ஒரு வாக்குறுதியை வழங்கியிருந்தார். அதற்கான அமைச்சரவையின் அனுமதியே அவர் பெற்றிருந்தார். தேர்தல் குறித்த அறிவிப்பு வெளிவருவதற்கு முன்னதாகவே இந்த அமைச்சரவை அனுமதி பெறப்பட்டிருப்பதால் இது தேர்தல் விதிகளை மீறி அவர் செயற்பாடு அல்ல என சொல்லப்படுகின்றது. ஆனால் தேர்தல் வரப்போகின்றது என்பதை தெரிந்து கொண்டுதான் இதனை அன்புடன் செய்திருப்பார்கள் என்பது கேள்விக்கு அப்பாற்பட்ட ஒன்று. தான் மீண்டும் ஜனாதிபதியாக வந்தால் அந்த சம்பள உயர்வு நிச்சயமாக கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் தான் அமைச்சரவையில் அங்கீகாரம் பெறப்பட்டது அந்த தகவலும் கூறப்படுகின்றது.

ரணில் இந்த வாக்குறுதியை கொடுத்து நாட்டின் வாக்காளர் தொகையில் கணிசமான தொகையை கொண்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களை தம்மசம் ஈர்த்து விடுவார் என்று அச்சத்தில் மட்டுமே ஜனாதிபதி வேட்பாளர்களும் இதே போன்ற வாக்குறுதிகளை கொடுப்பதை அண்மை காலத்தில் காண முடிகின்றது.

ரணில் எவ்வாறான வாக்குறுதியை கொடுத்தாரோ அதற்கு மேலாக தமது வாக்குறுதி இருக்க வேண்டும் என்பதில் சஜித் பிரேமதாசா அக்கிரையாக இருக்கின்றார். அதேபோலத்தான் அநுர குமார திசநாயக்காவும் வாக்குறுதிகளை கொடுத்திருக்கின்றார். ஆக மொத்தத்தில் யார் ஜனாதிபதியாக வந்தாலும் கணிசமான ஒரு தொகை சம்பளம் அதிகரிப்பதாக கிடைக்கும் என்பதுதான் அரசாங்க உத்தியோகத்தர்கள் நிலை.

தேர்தல் முடிவடைந்து புதிய அரசாங்கம் ஒன்று பதவியேற்ற பின்னர் இந்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியம் அனுமதி வழங்குமா என்பது சந்தேகத்திற்குரிய ஒன்றுதான். நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் இந்த அளவுக்கு பாரிய சம்பள அதிகரிப்புகளை வழங்குவது எந்த அளவுக்கு சாத்தியமானதாக இருக்கும் என்ற கேள்வியை பொருளாதார நிபுணர்கள் எழுப்பியிருக்கின்றார்கள்.

அதாவது இந்த சம்பள உயர்வு குறித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இரண்டு விடயங்கள் தடையாக அமையலாம் முதலாவது சர்வதேச நாணய நிதியம் அதனை ஏற்றுக் கொள்ளுமா என்பது இரண்டாவது நாட்டினுடைய பொருளாதாரம் அதனை தாங்குமா என்பது.

**உங்கள் கேள்விகளை**

**தமிழர் பொருண்மியம்,**
**கிறீன் மீடியா ஹவுஸ்,**
**68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.**
**என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**
**வாட்ஸ் அப் முகவரி +94 777 304010**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | 200/= |
| உருளைக்கிழங்கு | 200/= |
| பச்சை மிளகாய் | 200/= |
| தக்காளி | 200/= |
| மரவள்ளிக்கிழங்கு | 250/= |
| கோவா | 250/= |
| கரட் | 250/= |
| வாழைக்காய் | 250/= |
| சின்ன வெங்காயம் | 250/= |
| பாகற்காய் | 350/= |
| வெண்டிக்காய் | 80/= |
| பயற்றங்காய் | 150/= |
| பீற்றூட் | 80/= |
| முருங்கைக்காய் | 300/= |
| தேங்காய் | 130/= |




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 195/= |
| கனடா டொலர் - | 217/= |
| சீன யுவான் - | 41/= |
| யுரோ - | 335/= |
| ஜப்பான் யென் - | 2.0/= |
| சிங்கப்பூர்டொலர் - | 225/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 385/= |
| சுவிஸ் பிராங் - | 344/= |
| அமெரிக்க டொலர் - | 296/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 206/= |
| கனடா டொலர் - | 227/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 336/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 236/= |
| ஸ்ரோலிங் பவுண் - | 400/= |
| சுவிஸ் பிராங் - | 361/= |
| அமெரிக்க டொலர் - | 306/= |

அநேகமான கோயில்கள் இப்ப கடையள் மாதிரி வந்து கொண்டு இருக்குது எண்டு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லிறவ. எதுக்கெடுத்தாலும் காசு அதுகும் ஒரு ஈன இரக்கம் இல்லாமல் அள்ளுகொள்ளையா வாங்குவினம் . ஒரு இல்லாதவன் செல்லாதவன் ஏழை பாழை ஒரு நேத்தியைக் கீத்தியை செய்யப் பெரும்பாடு பட வேணும் எண்டு அவ ஆச்சி நெடுகவும் சொல்லுவா .

# எங்கட ஆச்சி



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

இண்டைக்கு வீட்டம்மா கொஞ்சம் அமைதியா இருக்க நான் கொஞ்சம் குழம்பிப்போனன். வேறஒண்டும்இல்லை ஒவ்வொருநாளும் நான் காலமையில கோயில்களுக்குப் போறனான். இண்டைக்கும்வழக்கம்போல வெளிக்கிட வீட்டம்மா பொழுது போகேல்லை அங்கை வந்தா ஆக்களோட ஊர்ப்புதினம் பறையலாம் தானும் வாறன்எண்டக் கூட்டிக்கொண்டு போனன்.

அங்கை கோயில்லை மாஸ்க்கை நாடியில இழுத்துவிட்ட ஒரு மனிசி ஒழுகிற மூக்கை உறிஞ்சினபடி கும்பிட்டுக் கொண்டு நிக்க எனக்கெண்டால் இலச்சுமணன் சூர்ப்பனகை யின்ரை மூக்கை அரிஞ்ச மாதிரி அவவின்ரை மூக்கை அரிய வேணும்போல கோவம்வந்திட்டுது. சில வேளை சூர்ப்பனகையும் இப்பிடி மூக்கைச்சிந்தத்தான் இலச்சுமணன் கோவத்திலை அவளின்ரை மூக்கை அரிஞ்சானோ தெரியாது.

நான்கோவத்தில பார் அந்த மனிசியை கழனி குடிக்கிற மாடு மாதிரி மூக்கை உறிஞ்சுது எண்டவும் வீட்டம்மா சும்மா பறையாதையுங்கோ ஆற்றையும் காதில விழும் எண்டா. அவ சொன்னது அங்கை குறுக்கை ஆக்களுக்கு முன்னால மறைச்சுக்கொண்டு நிண்டு கும்பிட்ட ஒருத்தருக்கு கேட்டுப்போட்டுது போல. அவரும் கோவிட் நேரம் பொலிசைக்கண்டு போட்டு மாஸ்க்கை இழுத்துவிடுகிறவை மாதிரி நாடியில கிடந்த தன்ரை மாஸ்க்கை இழுத்து விட்டுக் கொண்டு என்ன சத்தம் எண்டு கொண்டு வந்தார்.

அவற்றை கழுத்தில பெரிய தேடாவளையம் மாதிரி ஒரு சங்கிலி கையில தடிப்பமா ஒரு கைச்சங்கிலி விரல்களிலை அஞ்சாறு மோதிரம் போட்டிருந்தார்.

சேட்டில மேல இருந்த ரெண்டு மூண்டு பட்டன்களைத் திறந்து விட்டு தன்ரை நெஞ்சுத்திமிரைக் காட்டிக்கொண்டு நிண்டார். முகத்தில ஒரு கடுகடுப்பு ஆன்மீகக்களை எண்டது அஞ்சாத்துக்கும் இல்லை.

நான் உவர் ஆரெண்டவும் வீட்டம்மா உவர் கோயில் கொமிற்றியில இருக் கிறார். சும்மா கதையாதையுங்கோ பேந்து கோயிலுக்கும் வர விடாயினம் எண்டா. நான் அவரிட்டை சூர்ப்பனகை விசயத்தைச் சொல்ல அதெல்லாம் எங்களுக்ககுத் தெரியும் நீங்கள் கும்பிட வந்தா உங்கட அலுவலை மட்டும் பாருங்கோ. கடை நடத்திற எங்களுக்கு கோயில் நடத்தத் தெரியாதோ எண்டார்.

நாங்கள் இப்பிடிப்பிடிபட அங்கால சாமிக்கு குண்டியைக் காட்டிக்கொண்டு நிண்ட ஐயர் நூறு ரூபா ரிக்கற்காறர் முன்னால வாங்கோ அம்பது ரூபா ரிக்கற்காறர் பின்னால வாங்கோ ரிக்கற் வாங்காதவை இதுக்கை வந்து நிண்டு கொண்டு கரைச்சல் தராதையுங்கோ எண்ணவும் சனங்கள் முணுமுணுத்துக் கொண்டு போச்சினம்.

அநேகமான கோயில்கள் இப்ப கடையள் மாதிரி வந்து கொண்டு இருக்குது எண்டு எங்கட ஆச்சி நெடுகவும் சொல்லிறவ. எதுக்கெடுத்தாலும் காசு அதுகும் ஒரு ஈன இரக்கம் இல்லாமல் அள்ளுகொள்ளையா வாங்குவினம் . ஒரு இல்லாதவன் செல்லாதவன் ஏழை பாழை ஒரு நேத்தியைக் கீத்தியை செய்யப் பெரும்பாடு பட வேணும் எண்டு அவ ஆச்சி நெடுகவும் சொல்லுவா .

நான் அவர் கோயில் கொமிற் றிக்காறரோட கதைக்க வெளிக்கிட வீட்டம்மா ஏற்கனவே உங்க கோயில் வழியை ஐயர்மார், மணியகாறன்மார், குறுக்க மறுக்க உழைச்ச புதுப் பணக்காரர், அன்னதான மடக்காறர் எண்டு நூற்றெட்டுப் பிரச்சினை கிடக்கு. நீங்கள் பேந்து புதுசா ஒரு பிரச்சினையைத் தொடங்கி கோட்டுக் கேசு எண்டு அலையவேண்டாம் எண்டு புதுசா நேசறிக்குப் போற ரெண்டு மூண்டு வயதுப்பெடிபெட்டையளை அழஅழத்தாய்மார் கொறகொறவெண்டு இழுத்துக்கொண்டு போறமாதிரி இழுத்துக்கொண்டு வந்திட்டா.



# உங்கள் படைப்பாக்கத் திறனுக்கு ஒரு வாய்ப்பு



நவீன காலத்தில் உற்பத்தித் துறையில் ஈடுபடும்போது அதனை மேம்படுத்தவும் இலகுபடுத்தவும் புதிய உபகரணங்கள் அல்லது இயந்திரங்கள் தேவைப்படுகின்றன.

அவ்வாறான கருவிகள் பலவற்றை கடந்த காலங்களில் எம்மவர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

உங்களிடமும் அவ்வாறான ஒரு யோசனை இருந்து, அதனைச் செயற்படுத்த உதவி தேவையாக இருந்தால் அதனை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராக இருக்கின்றது.

இரண்டு பிரிவுகளாக இதற்கான உதவிகளை வழங்குவதற்கு பொருண்மியம் குழுவினர் திட்டமிட்டுள்ளார்கள்.

## உள்நாட்டு உற்பத்தி மேம்பாட்டிற்கான புதிய இலகு கருவிகளை கண்டுபிடித்தல்

1. வேலையை இலகுபடுத்துவதும் நேரத்தை மிச்சப்படுத்துவதுமாக அமைதல்.
2. சமூக பாவனைக்கு உகந்ததாகவும் பாதுகாப்பானதாகவும் அமைதல்.
3. கூடுதலாக கிடைக்கப்பெறும் வளங்களைக்கொண்டு உருவாக்க கூடியதாக அமைதல்.
4. ஏற்கனவே கண்டுபிடிக்கப்படாத, சொந்த தயாரிப்பாக இருக்க வேண்டும்.
5. நியாயமான விலையில் எல்லோருக்கும் கிடைக்ககூடியதாகவும், அனைவரும் பயன்படுத்தகூடியதாகவும் அமைதல்.

இதற்கான உங்கள் யோசனைகளை நீங்கள் முன்வைக்கலாம். உங்களுடைய முன்மொழிவுடன் அதற்குத் தேவையான செலவுத் தொகையும் குறிப்பிடப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் திட்டங்களுக்கு தேவையான நிதி உதவியை வழங்க தமிழர் பொருண்மியம் தயாராகவுள்ளது.

## மக்களை வலுப்படுத்தும் சனசமூக நிலையங்களினை அடையாளப்படுத்தல்

1. பதிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
2. இவர்கள் தமது சமூகத்து மக்களையும் உள்ளூர் வளங்களையும் இணைத்து திட்டங்களை மேற்கொள்வது பொருத்தப்பாடானது.
3. அவர்கள் தமது சமூகத்தின் வளர்ச்சிக்காக ஆற்றிவரும் பணிகளையும் , வரும் காலத்தில் உள்நாட்டு அல்லது தமது சமூகத்தில் செயற்படுத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் திட்டங்களையும் சமர்ப்பிக்கலாம்.
4. திட்டங்கள் அனைத்தும் அந்த சமூகத்தின் நன்மை கருதுவனவாயும், அவர்களனைவரதும் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.
5. கண்காணிப்பு குழுவினரால் ஆராய்ந்து முடிவுறுத்தப்படும் திட்டங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும். அதற்கான நிதி உதவிகளும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்கள் அடுத்த வாரம்

உங்களுடைய முன்மொழிவுகளை வாட்ஸ் அப் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

**வாட்ஸ் அப் இலக்கங்கள் +94 777 30 4010 / +94 702 67 5575**
**மின்னஞ்சல் - tamilseconomy@gmail.com**

**கிளிநொச்சியின் அழகான பாதுகாக்கப்பட வேண்டிய சொத்து இந்தக்குளம். இதன் அருமை தெரியாமல் அமைதியாக இருக்கும் அரசியல் வாதிகளுக்கும் இந்தக் கட்டுரை சமர்ப்பணம். ஏப்படி இந்த குளத்தை காப்பாற்றப்போகிறோம் மேலும் மேலும் காணிகள் பெருத்து நடுக்குளத்தை எட்டியுள்ளது. யாரோ கல்வியறிவற்ற குடிநிலமற்ற ஏழைகள் இதை செய்யவில்லை. கோடீஸ்வரர்களால் திருடப்படபடுகிறது. அதுதான் பெரிய பிரச்சனையாக உள்ளது.**

வாய்க்கால்களும் தெளிந்த நீரும், பருவ காலங்களில் கிழக்கே வெண்தாமரையும் மேற்கே செந்தாமரையும் பூத்திருக்கும் அழகு. நடுவே எதுவித களங்கமுமற்று தெளிந்த நீரின் சிற்றலைகளின் வீச்சும், அதன் மீது லாவகமாக பாய்ந்து மீன் கொத்திவிளையாடும் நீர்ப்பறவைகளும், கரையோரமாக கசிந்து பீறிட்டுப்பாயும் பரவிப்பாஞ்சான் சிற்றாறும், கிளிநகரின் அழகுக்கு அழகு செய்கிறது.

# காணாமல் ஆக்கப்படும் குளங்கள்

## பார்வை 6



தமிழ்க்கவி



ஒவ்வொரு மனிதரும் வாழ்வது அவனது சந்ததிக்காக, என்றுதான் உலக நீதி சொல்கிறது. சாதாரணமாக ஒருவரை நீங்கள் கேட்டுப்பாருங்கள். அவர் ஓய்வின்றி உழைப்பார். சேர்ப்பார். சொத்துகளில் முதலீடு பண்ணுவார். பிள்ளைகளை நல்ல பாடசாலையில் சேர்ப்பார். அதன் பிறகும் அவர்களை தனியார் கல்விக்காக நல்ல பாடசாலையில் சேர்ப்பார். அதன்பிறகும் அவர்களை தனியார் கல்வி நியைங்களுக்கு ஏந்திச் செல்வார். ஓய்வின்றி கணவனும் மனைவியும் ஓடிக்கொண்டிருப்பார்கள்..

சொல்லப்போனால் கணவனுக்கும் மனைவிக்கும் இது தவிர்க்கமுடியாத தவிர்க்க விரும்பாத ஒரு செயலாக தொடர்ந்து கொண்டிருக்கும் பிள்ளைகளுக்காக. அவர்களுக்காகத்தான் உழைக்கிறோம். அவர்களுக்காகத்தான் சேர்க்கிறோம் என்று சொல்லாதவர் யார்? உலகம் எவ்வளவு வேகமாக சுழல்கிறதோ அதைவிட வேகமாக இவர்கள் அலைகிறார்கள். அவர்கள் உண்மையில் தமது சந்ததிக்காக எதை செய்கிறார்கள் என்பதை கவனித்தால், அவர்களது சந்ததி இந்தமண்ணில் வாழ முடியாமல் போவதற்கான எல்லா முயற்சிகளையும் செய்கிறார்கள்.

முதுமை ஆட்கொண்டு, நடை தளர்ந்து நோயும் நோய்கண்டு படுத்த பாயுமாக இருக்கும் ஒருவர் தனது வீடை பெரிதாக கட்டிக்கொண்டிருக்கிறார். அதில் அவர் வாழப் போவது நிச்சயமில்லை. கேட்டால் மகனுக்காக மகனின் பிள்ளைகளுக்காக என்கிறார். ஆனால் அவர் அந்த வீட்டை உண்மையில் தனது சொந்த நிலத்தில் கட்டவில்லை.

பொதுமக்களின் சொத்தை அபகரித்து அதில்தான் கட்டுகிறார்கள். இவருக்குப் போட்டியாக மேலும் பலர் இவ்வாறு வீடுகளைக் கல்லடுக்கி கட்டினாலும் அது அவர்கள் எதிர்கால சந்ததிக்காக கட்டிவிடும் கல்லறை என்பதை அறிய மாட்டார்கள்.

கிளிநொச்சியின்பிரதான அழகும்வளமும் பெருமையும் கிளிநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள குளத்தில்தான் தங்கியுள்ளது. பரந்தன் வரையுள்ள பசுமை போர்த்த வயல்கள், நகரம் முழுமைக்குமான கிணறுகளின் நன்நீர், வரட்சியற்ற குளிர்மையான நீரைத்தடவி வரும் காற்று, திரும்பிய பக்கமெல்லாம் சிறகு விரித்தாடும் தென்னை மரங்கள். அவற்றின் மருங்கே கிடக்கும் பழமரங்கள், நாற்புறமும் சூழ ஓடிக்கொண்டிருக்கும் அழகிய

என்றாலும் ரோசாவில் முள்ளிருப்பது போல அழகான நாகத்தின் விசம் போல கிளிநொச்சிக் குளத்தின் முதலைகளும் கவரக்கொய்யாக்களும்ஒரு எச்சரிக்கைதான். அண்மையில் ஆடு, மாட்டுக்கன்று, நாய்கள், கோழிகள் என சுவைத்த பரவிப்பாஞ்சான் முதலை ஒரு பெண்ணைப்பிடித்து மோசமாகக் குதறியிருக்கிறது.

அது தனது வீட்டில்தான் இருக்கிறது. எதுவும் செய்துவிட முடியாது சில வருடங்களின் முன் ஒருவரின் வீட்டிற்குள் நுழைந்து கோழிகளை தின்று தள்ளிய வரலாறும் உண்டு. அனால் வளக்கேதும் போட முடியாது அது குளம். குளத்துக்குள் முதலைகளின் நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருந்தது அந்த மனிதர்கள்தான். எனவே ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் அந்த மனிதர் இப்போது பெரியளவில் பாதுகாப்பரண் ஒன்றை கட்டுவதாக தெரிகிறது.

கிளிநொச்சிக்குளம் இரணைமடு நீரைப் பெற்று வழங்கும் குளமாகவே



அமைந்துள்ளது. அதனால் இதற்கு இயற்கை அரண்கள் எதுவும் பலமாக இல்லை. இதன் கீழ் பரந்தன் உமையாள்புரம் உருத்திரபுரம் வரையும் அது கடந்தும் நீரை கொண்டு செல்ல வாய்க்கால்கள் அமைக்கப்பட்டுள்ளது. மருதநகர் இதன் தொடக்கமாக இருக்கிறது.

வட்டக்கச்சி வீதியிலிருந்து மருதநகருக்கு இறங்கும் வீதியின் கிழக்குப்புறமாக ஒரு துலுசும், அதற்கான வாய்க்காலும் இருந்தது. ஆனால் அந்த வாய்க்காலின் மேலாக காணிகளைப் பிடித்து வீடுகளைக்கட்டி அதன் முகவரியே இல்லாமல் செய்துவிட்ட தனக்காரர்களால் இப்போது அந்த துலுசையே காணாமல் ஆக்க முடிந்துள்ளது. அதன் கிழக்கேயான வயல்களுக்கு பரவிப்பாஞ்சான் ஆற்றின் நீரை வீதியை மறித்துச்செல்லும் கால்வாய் விளங்குகிறது அதனால் முன்புறம் நீரைப் பெற முடியாத பல ஏக்கர் நிலங்களுக்கு பின்புறமாக வரும் வாய்க்கால் பயன்படுகிறது முன்பறம் மதில்களால் பழைய வாய்க்கால் மறைக்கப்பட்டுவிட்டது. (பழைய காணிகளின் வரைபடத்தை பார்க்கவும்.)

நீர்ப்பாசன திணைக்களம் குடிநீர் வழுங்கல் செய்வதற்பகான வேலைகளைத் தொடங்கி நீண்ட காலமல்லவா? அவர்களது திட்டப்படி குளத்துக்குள் அமைக்கப்பட்டிருக்கும் வீடுகள் சில குழாய் நீரைப் பெறுகின்றன. யுத்த காலத்தில் எட்டு வீடுகளும் அதன் பின்னாக ஏக்கர் கணக்கில் பரந்திருந்த மேய்ச்சற் தரவைகளும் இருந்தன. அதிகளவான விவசாய செய்கைக் காலத்தில் கால்நடைகளை மேய்ப்பதற்காக அங்கு கொண்டு வருவார்கள். சுமார் ஐநூறு மாடுகளுக்கு மேல் அங்கு மேயும். அவை தண்ணீர் குடிக்க குளமிருந்தது. மாலை மூன்று மணியளவில் அதை மேய்ப்பவர் அவற்றை ஓட்டிச் செல்வார். இப்போது அந்த மேச்சற்றரவை காணாமல் போயுள்ளது.

அதில் பல மாடிக்கட்டடங்கள். கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. புதிய வீடுகள் திட்டமிட்ப்பட்டு நிலத்தில் மண்கொட்டி நிரப்பி அமைக்கப்படுகிறது. ஏக்கர் கணக்கில் நிலம் குளத்தின் நீரேந்து பரப்பில் மண்கொட்டி மூடப்படுகிறது. நாளாந்தம் நள்ளிரவில் கனரக வாகனங்களின் இரைச்சல் தூக்கத்தை கெடுக்கின்றன. கடபுடா சத்தத்துடன் பொருட்கள் பறிக்கப்படுகின்றன. காலையில் விதியை மறித்து கொட்டியவை வளவுகளுக்குள் சென்று குளத்தில் கொட்டப்படுகிறது. இதை தடுப்பவர் யார்?



அருகிலேயே பொலீஸ் நிலையம். மிக அருகிலேயே நீர்ப்பாசன திணைக்களம். பிரதேச சபை பிரதேச செயலகம் மாவட்ட செயலகம் எல்லாமே சூழ அமைந்திருக்கும் இடத்தில் குளம் காணாமல் ஆக்கப்படுகிறது. ஒரு சிலரின் தேவைகளுக்காக ஊர் கொள்ளையடிக்கப்படுகிறது. ஏப்படி. இப்போது அம்பாள் குளம் காணாமல் போயிருப்பது போல அந்தப்பிரதேச கிணறுகள் அனைத்தும் வரண்டு போனது போல கிளிநொச்சி நகரம் போத்தல் தண்ணீரில் உயிர்வாழப்போகும் காலம் நெருங்கி வருகிறது.

இந்தப்பகுதியில் வாழும் மக்கள் தமது தென்னைமரத்து ஓலைகளை குளத்தில் ஊறப்போட்டு கிடுகு பின்னி விற்று குடும்பச்செலவை சமாளித்தார்கள் இன்று தென்னோலைகள் தீயிட்டு கொளுத்தப்படுகின்றன. காரணம் குளத்திற்கு மக்கள் செல்லும் வழிகள் இந்த காணி அபகரிப்பாளர்களால் மதில்கட்டி அடைக்கப்பட்டுள்ளது.

கால்நடைகள் வளர்த்தவர்கள் அவற்றை விற்றுவிட்டார்கள் அவைகள் நீர் அருந்த இடமில்லாமல் தொலைவுக்குப் போய் தொலைந்து போகின்றன. இதற்கெல்லாம் தீர்வு யார் தரப் போகிறார்கள்?

கிளிநொச்சியின் அழகான பாதுகாக்கப்பட வேண்டிய சொத்து இந்தக்குளம். இதன் அருமை தெரியாமல் அமைதியாக இருக்கும் அரசியல் வாதிகளுக்கும் இந்தக் கட்டுரை சமர்ப்பணம். ஏப்படி இந்த குளத்தை காப்பாற்றப்போகிறோம் மேலும் மேலும் காணிகள் பெருத்து நடுக்குளத்தை எட்டியுள்ளது. யாரோ கல்வியறிவற்ற குடிநிலமற்ற ஏழைகள் இதை செய்யவில்லை. கோடீஸ்வரர்களால் திருடப்படபடுகிறது. அதுதான் பெரிய பிரச்சனையாக உள்ளது.

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY



ஞாயிற்றுக்கிழமை
15.09.2024

# 2024 இலங்கை ஜனாதிபதி தேர்தல்:

# முக்கியமான பொருளாதார தாக்கங்கள் மற்றும் உத்திகள்

**ஜனாதிபதித் தேர்தல், நாட்டின் பொருளாதாரப் பாதையில் குறிப்பிடத்தக்க தாக்கங்களைக் கொண்டுள்ளது. நிதிக் கொள்கைகள், கடன் மறுசீரமைப்புத் திட்டங்கள் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் உள்ளிட்ட நெருக்கடிக்கான அவர்களின் முன்மொழியப்பட்ட தீர்வுகளை வேட்பாளர்களின் தளங்கள் பிரதிபலிக்கும்**






AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

"இலங்கையில் பொருளாதார மீட்சி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான பாதைக்கு சமூகத்தின் அனைத்துத் துறைகளினதும் ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படும். ஜனாதிபதித் தேர்தல் என்பது ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பது மட்டுமல்ல, தேசத்தின் எதிர்காலத்திற்கான கூட்டுத் திசையை அமைப்பதும் ஆகும். தற்போதைய பொருளாதார சவால்களை முறியடிக்கவும், நெகிழ்ச்சியான, வளமான எதிர்காலத்தை உருவாக்கவும் பொதுமக்கள், வணிகங்கள் மற்றும் அரசாங்கம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்".

எதிர்வரும் செப்டம்பர் 21, 2024 இல் நடைபெறவுள்ள இலங்கை ஜனாதிபதித் தேர்தல், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் ஒரு முக்கிய நிகழ்வாக உள்ளது. அதிகரித்து காணப்பட்ட பணவீக்கம், கணிசமான கடன் சுமை மற்றும் பரவலான பொதுமக்களின் அதிருப்தி ஆகியவற்றால் குறிக்கப்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியுடன் இலங்கை போராடி வரும் நிலையில், நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் தேர்தல் முடிவுகள் முக்கியமானதாக இருக்கும். தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் தேர்தலின் சாத்தியமான தாக்கத்தையும் மற்றும் பொது மக்களும் வணிக சமூகமும் இந்த முக்கியமான தருணத்தை எவ்வாறு அணுக வேண்டும் என்பது பற்றிய இந்த கட்டுரை ஆராய்கின்றது.

பொருளாதார சூழல்: தற்போதைய நெருக்கடி மற்றும் தேர்தல் தாக்கங்கள்.

சமீபகால வரலாற்றில் மிகவும் சவாலான பொருளாதார நெருக்கடிகளில் ஒன்றாக இலங்கை தற்போது பயணித்துக் கொண்டிருக்கிறன்து. அந்நியச் செலாவணி கையிருப்பு குறைதல், அதிக பணவீக்கம் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார மந்தநிலை ஆகியவற்றால், நாடு கடுமையான கடன் நெருக்கடியை சந்தித்து வருகிறன்து. சமூக அமைதியின்மை மற்றும் அரசியல் ஸ்திரமின்மை ஆகியவை தேவையான சீர்திருத்தங்களை செயல்படுத்துவதற்கும் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்குமான முயற்சிகளை மேலும் சிக்கலாக்கியுள்ளன.

எனவே, ஜனாதிபதித் தேர்தல், நாட்டின் பொருளாதாரப் பாதையில் குறிப்பிடத்தக்க தாக்கங்களைக் கொண்டுள்ளது. நிதிக் கொள்கைகள், கடன் மறுசீரமைப்புத் திட்டங்கள் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் உள்ளிட்ட நெருக்கடிக்கான அவர்களின் முன்மொழியப்பட்ட தீர்வுகளை வேட்பாளர்களின் தளங்கள் பிரதிபலிக்கும். ஒவ்வொரு வேட்பாளரும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், முதலீட்டாளர் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், மக்களின் உடனடித் தேவைகளை எவ்வாறு நிவர்த்தி செய்யவும் திட்டமிடுகிறார்கள் என்பது முக்கியப் பிரச்சினைகளில் அடங்கும்.

### பொதுக் கண்ணோட்டம்: தேர்வுகள் மற்றும் எதிர்பார்ப்புகளை வழிநடத்துதல்.

ஜனநாயக செயல்பாட்டில் குடிமக்களின் பங்கேற்பு முக்கியமானது. தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளை பொறுப்புக்கூற வைப்பதிலும், தேசிய கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்கள் குறித்து ஆக்கப்பூர்வமான உரையாடலில் ஈடுபடுவதிலும் வாக்காளர்கள் செயலில் ஈடுபட வேண்டும்.

பொது மக்களுக்கு, தேர்தல் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நிர்வாகத்தின் திசையில் செல்வாக்கு செலுத்துவதற்கான வாய்ப்பை வழங்குகிறது. பொருளாதார மீட்சிக்கான வேட்பாளர்களின் திட்டங்களையும், இந்த உத்திகளை திறம்பட செயல்படுத்துவதற்கான அவர்களின் திறனையும் வாக்காளர்கள் கவனமாக ஆராய வேண்டும். கவனம் செலுத்த வேண்டிய முக்கிய பகுதிகள் பின்வருமாறு:

**1. பொருளாதாரக் கொள்கைகள்:** ஒவ்வொரு வேட்பாளரும் பணவீக்கம், கடன் மற்றும் நிதிப் பற்றாக்குறையை எவ்வாறு தீர்க்க திட்டமிடுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது. பொருளாதார நிவாரணம் மற்றும் பொருளாதார சீர்திருத்தத்திற்கான விரிவான திட்டங்களின் வாக்குறுதிகள் ஒவ்வொரு வேட்பாளரும் பொருளாதாரத்தை எவ்வாறு ஸ்திரப்படுத்தவும் வளரவும் விரும்புகிறார்கள் என்பதைப் பற்றிய நுண்ணறிவுகளை வழங்க முடியும்.

**2. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல்:** வாக்காளர்கள் வெளிப்படைத்தன்மை மற்றும் நிர்வாகத்தில்

வேட்பாளர்களின் பதிவுகளை கருத்தில் கொள்ள வேண்டும். பொருளாதார நெருக்கடியை திறம்பட நிர்வகிப்பதற்கு வலுவான நிறுவனங்களும் ஊழலைக் குறைப்பதற்கான அர்ப்பணிப்பும் தேவைப்படும்.

**3. பொது சேவைகள் மற்றும் சமூக நலன்:** சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட பொது சேவைகளில் பொருளாதார கொள்கைகளின் தாக்கம் மற்றொரு முக்கியமான காரணியாகும். சமூக நலத் திட்டங்களுக்கான வேட்பாளர்களின் திட்டங்கள் ஒட்டுமொத்த பொருளாதார ஸ்திரத்தன்மையின் பின்னணியில் மதிப்பிடப்பட வேண்டும்.

### வணிக சமூகக் கண்ணோட்டம்: மூலோபாயத் தழுவல்கள் மற்றும் வாய்ப்புகள்.

பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையை வளர்ப்பதில் வணிக சமூகம் பங்கு வகிக்கிறன்து. உள்ளூர் சமூகங்களில் முதலீடு செய்வதன் மூலமும், நிலையான நடைமுறைகளை ஆதரிப்பதன் மூலமும், சாதகமான வணிக நிலைமைகளுக்கு ஆதரவளிப்பதன் மூலமும், நிறுவனங்கள் பரந்த பொருளாதார மீட்சிக்கு பங்களிக்க முடியும்.

வணிக சமூகத்தைப் பொறுத்தவரை, தேர்தல் முடிவுகள் வணிகங்கள் செயல்படும் பொருளாதார சூழலை வடிவமைக்கும். நிறுவனங்கள் தேர்தலில் செல்லும்போது பின்வரும் உத்திகள் மற்றும் கவனம் செலுத்தும் பகுதிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்:

**1. திட்டமிடல்:** சாத்தியமான கொள்கை மாற்றங்களின் அடிப்படையில் பல மூலோபாய சூழ்நிலைகளை உருவாக்குவதன் மூலம் வணிகங்கள் பல்வேறு விளைவுகளுக்கு தயாராக வேண்டும். வணிகச்செயல்பாடுகள், முதலீட்டுச் சூழல் மற்றும் ஒழுங்குமுறைச் சூழல் ஆகியவற்றில் வெவ்வேறு வேட்பாளர்களின் பொருளாதாரத் திட்டங்களின் தாக்கத்தை மதிப்பிடுவது இதில் அடங்கும்.

**2. ஈடுபாடு மற்றும் ஆதரவு:** வேட்பாளர்கள் மற்றும் அவர்களது குழுக்களுடன் ஈடுபடுவது எதிர்கால பொருளாதாரக் கொள்கைகள் பற்றிய நுண்ணறிவை வணிகங்களுக்கு வழங்க முடியும். சாதகமான வணிக நிலைமைகளுக்கான ஆதரவு மற்றும் தொழில்துறை தேவைகளை தெளிவாக தொடர்புகொள்வது தேர்தலுக்கு பிந்தைய கொள்கை திசைகளை வடிவமைக்க உதவும்.



**3. முதலீடு மற்றும் இடர் மேலாண்மை:** சாத்தியமான கொள்கை மாற்றங்களின் காரணங்களினால் நிறுவனங்கள் தங்கள் முதலீட்டு உத்திகள் மற்றும் இடர் மேலாண்மை நடைமுறைகளை மதிப்பாய்வு செய்ய வேண்டும். பல்வகைப்படுத்தல் மற்றும் எச்சரிக்கையான முதலீட்டு அணுகுமுறைகள் பொருளாதார நிச்சயமற்ற தன்மையுடன் தொடர்புடைய அபாயங்களைக் குறைக்கலாம்.

**4. பல்வேறு துறை சார் தொடர்பு:** ஊழியர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் உட்பட பங்குதாரர்களுடன் தெளிவான தொடர்பு அவசியம். தேர்தல் முடிவுகள் வணிக நடவடிக்கைகளை எவ்வாறு பாதிக்கலாம் மற்றும் மூலோபாய முடிவுகள் பற்றிய வெளிப்படைத்தன்மை நம்பிக்கையையும் ஸ்திரத்தன்மையையும் பராமரிக்க உதவும்.

அரசாங்கத் தலைமை: புதிய ஜனாதிபதியும் நிர்வாகமும் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வலுவான தலைமைத்துவத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்த வேண்டும். திறமையான நிர்வாகம், வெளிப்படையான முடிவெடுத்தல் மற்றும் நீண்ட கால நிலைத்தன்மையில் கவனம் செலுத்துதல் ஆகியவை பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு முக்கியமாக இருக்கும்.

செப்டெம்பர் 2024 ஜனாதிபதித் தேர்தல் இலங்கைக்கு ஒரு மிக முக்கிய தருணமாகும், நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு ஆழமான தாக்கங்கள் உள்ளன. இது ஒரு சவால் மற்றும் தேசம் மீட்பு மற்றும் செழிப்புக்கான ஒரு போக்கை பட்டியலிடுவதற்கான வாய்ப்பை பிரதிபலிக்கிறன்து. தகவலறிந்து, சுறுசுறுப்பாக ஈடுபடுவதன் மூலமும், மூலோபாய ரீதியாக தயார்படுத்துவதன் மூலமும், பொது மக்களும் வர்த்தக சமூகமும் இலங்கையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்க முடியும். இந்த செயல்பாட்டில் பொதுமக்களும் வணிக சமூகமும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். பொதுமக்களைப் பொறுத்தவரை, வேட்பாளர்களின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் நிர்வாகப் பதிவுகளின் அடிப்படையில் தகவலறிந்த வாக்களிப்பது நேர்மறையான பொருளாதார எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கியமாகும். வணிகங்களைப் பொறுத்தவரை, மூலோபாயத் திட்டமிடல் மற்றும் அரசியல் செயல்முறையுடன் செயலில் ஈடுபடுதல் ஆகியவை தேர்தலுக்குப் பிந்தைய சூழலின் சிக்கல்களைத் தீர்க்க உதவும்.

இந்த முக்கியமான தேர்தல் மைல்கல்லை இலங்கை நெருங்கும் போது, வாக்காளர்களின் தெரிவுகளும் வர்த்தக சமூகத்தின் பதில்களும் கூட்டாக முன்னோக்கி செல்லும் பாதையில் செல்வாக்கு செலுத்தும். இதன் விளைவு அடுத்த தலைமையை தீர்மானிப்பது மட்டுமின்றி, வரவிருக்கும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கான பாதையையும் அமைக்கும்.

# பத்தாவது வருட பூர்த்தியை கொண்டாடும் ஜீவ ஊற்று - அன்பின் கரங்கள் நிறுவனம்

## நேர்கண்டவர் - ஞானம் கவினி

போரும் இயற்கை அனர்த்தங்களும் தின்று போட்ட பூமியில் மக்களின் வாழ்வாதாரங்களை வலுப்படுத்தும் நோக்கோடு முளைத்திருக்ருக்கின்றது ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் நிறுவனம்.

போர் முடிவுக்கு வந்தாலும் அந்த இன்னல்களின் இன்று விடுபட முடியாதபடி தடுமாறிக் கொண்டிருந்த காலம் அது. 2014 ம் ஆண்டு புரட்டாசி முதலாம் திகதி அளவில் தனது மக்களுக்கான அறப்பணியில் காலடி எடுத்து வைக்கிறார் ஜெஜீவன்.

காலப்பணிகளில்தனது அவையவத்தை இழந்து விட்டாலும்நம்பிக்கையை இழக்காத மனிதனாக தனது சமூகத்திற்காக பயணிக்க ஆரம்பிக்கிறார். புலம்பெயர் தேசத்திலே தனக்கு ஊதியமாக கிடைத்த 60 ஜீரோவில் 20 ஜூரோக்களை தனது அத்தியாவசிய தேவைகளுக்கு பயன்படுத்திய இவர், மிகுதி நாற்பது ஜூரோக்களை சேகரித்து தனது முதலாவது அறப்பணியை ஆரம்பிக்கிறார்.

தன்னால் முடிந்த அளவு தனது மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் பணியில் கல்வி மருத்துவம் வாழ்வாதாரத் திட்டங்கள் என்று படிப்படியாக ஆரம்பிக்கிறார்,

அப்போதுதான் இவரது நிலையான செயற்பாடுகளையும், சமூகம் மீதான பற்றுறுதியையும் இனம் கண்டு கொண்ட இவரது நண்பர்கள் மற்றும் நன்கொடையாளர்கள் தாமும் சமூகத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற அவாவில் இருக்கும் பலர் இவரை தொடர்பு கொள்கின்றனர்.

ஆரம்பத்தில் சமூகத்தில் பாதிய இடர்களை சந்தித்து இருந்தாலும் இன்று, நன்கொடையாளர்களின் உதவியோடு 120 க்கும் மேற்பட்ட நிரந்தர வீடுகள்,

மலர் சில கூடங்கள் ,குடிநீர் குழாய் கிணறுகள், 300க்கும் அதிகமான வாழ்வாதார திட்டங்கள், மற்றும் தொழில் பயிற்சிகள் என்று தன் மக்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் அத்தனை செயற்பாடுகளிலும் தன்னை நிலை இணைத்துக் கொண்டிருக்கிறார்.

சிறுக சிறுகத்தன்னை கட்டி எழுப்பிய இந்த ஜீவ ஊற்று அன்பின் தடம் நிறுவனமானது இன்று பல்வேறுபட்ட மக்களிடையே தன் அறப்பணிகளை ஆற்றி வருகின்றது.

தேவைப்பாடு உடைய மக்களை இனம் கண்டு இதயசுத்தியோடு அவர்களது துன்பங்களில் பங்கெடுத்த துயர் துடைக்கும் வேலைகளை முன்னெடுத்து வருகின்றனர் இந்த நிறுவனத்தினர்.

இந்த அறப்பணிகளில் தம்மை இணைத்துக்கொண்டிருப்பவர்கள் எந்தவித சன்மானங்களும் சலுகைகளுமற்று, தமது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் ஒரே நோக்கோடு பயணித்துக் கொண்டிருக்கின்றனர் என்று பெருமையோடு கூறுகிறார் ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் நிறுவனத்தின் நிறுவனர் ஜெஜீவன.

வடக்கு கிழக்கு முழுவதுமாய் 25க்கும் மேற்பட்ட அறப்பணியாளர்களோடு, ஆயிரக்கணக்கான பயனாளிகளின் அத்தனை தேவைகளையும் திறம்பட நிறைவேற்றி வருகின்றது ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் அறக்கட்டளை நிறுவனம்.

123 வது வீட்டை கையளிக்கும் நிகழ்வில் ஈடுபட்டிருந்த ஜெஜீவனிடம் நீங்கள் இதுவரை எதிர்கொண்ட சவால்கள் பற்றி சொல்லுங்கள் என்று வினாவினோம்?

ஆரம்பத்தில் ஒரு சொற்ப பணத்தோடு ஆரம்பித்த எனது அறக்கட்டளை நிறுவனம் இன்று வேர் விட்டு விழுதெறிந்து பல மக்கள் இளைப்பாறும் விருட்சமாக நிற்கிறது என்று சொன்னால் அது என்னுடன் அந்த இக்கட்டான காலகட்டத்தில் கூட பயணித்த நன்கொடையாளர்களால் தான்நிற்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

அறப்பணிகளுக்கு தேவை ஏற்படும் பொழுதெல்லாம் எந்தச் சலனமும் இன்றி எங்களோடு கூடவே இருந்து நெறிப்படுத்தி நிதி உதவிகளை செய்தவர்களுள் நெதர்லாந்தில் உள்ள மிஷன் மெயில் நிறுவனத்தின் பங்கு அளப்பரியது.

அத்தோடு நிரந்தரமான வீட்டுத் திட்டங்களை அமைத்து எமது மக்களின் நிம்மதியான உறக்கத்திற்கு வழி வகுத்தவர்களில் எஸ் கியூ எம் ஃ பவுண்டேஷன் நிறுவனத்தினர் எப்போதும் நெஞ்சில் நிலைத்திருக்க வேண்டியவர்கள்.

இப்படி சொல்லிக் கொண்டு போகலாம், சின்ன சின்னதாய் என்னோடு சேர்ந்து பயணிக்கும் அத்தனை பேர்களையும் நெஞ்சத்தின் அடி ஆழத்திலிருந்து ஒவ்வொருவராய் அவர்களுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன்.

குளிர் தேசங்களில் ஒன்றுக்கு இரண்டு வேலைகளைச் செய்து , தமது குடும்பங்களுக்கு செலவழிக்க வேண்டிய நேரங்கள் பலவற்றை நமது தேச மக்களுக்காக தமது கடமையாய் நினைத்து செலவழித்த பலர் இன்றும் எங்களோடு சேர்ந்து பயணித்துக் கொண்டிருக்கின்றனர்.

புலம் பெயர் தேசங்களிலே இருப்ப வர்கள் இவ்வாறு தங்கள் அன்பை வெளிப்படுத்துகிறார்கள் என்று சொன்னால்



**நிறுவுனர் தம்பிராஜா ஜெஜீவன்.**

தாயகத்தில் இருக்கின்ற அறப்பணியாளர்கள் என் தம்பிகளாய் தங்கைகளாய் சகோதரர்களாய் எப்போதும்

கொஞ்சமும் தளர்ந்து போகாமல், எந்தப் பிரதி பலனையும் எதிர்பாராமல், காடு மேடங்கு மலைந்து வீதிகளை அற்ற சந்துக்களில் எல்லாம் தெருக்களை உண்டாக்கி, தம்மைச் சுற்றி இருக்கிற மனிதர்களின் வாழ்வாதாரத்தை நிலை பேறாக்குவதற்கு அத்தனை வேலைகளையும் செய்து வருகின்றனர்.

இந்த ஜீவ ஊற்று அறக்கட்டளை நிறுவனத்தை தலைமை தாங்கி நடக்கும் ஒரு சிங்கம் பெண்ணாக நிறுவனத்தின் தலைவி ஒவ்வொரு விடயங்களையும் சரியாக வழி நடத்தி வருகிறார். அவதோடு இணைந்த நிர்வாகிகள் மற்றும் அறப் பணியாளர்கள் ஒவ்வொருவரும் எந்த நேரத்திலும் அற பணிகளைச் செய்வதற்கு தயாராக இருக்கின்றனர்.

இவர்கள் ஒவ்வொருவரது அயராத உழைப்பும் சலிக்காத மனமும் தான் பல எளிய மக்கள் இன்றும் தமது சொந்த வீடுகளில் படுத்து உறங்குவதற்கும், அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக்

# புதிய அலுவலகம் திறப்பு விழா

உப்புமாவெளி அளம்பில் முல்லைத்தீவு.




கொள்வதற்கும், பசி என்றில்லாது உண்ணுவதற்கும் ,தமது குழந்தைகளின் கல்வியை தொடரவும் அடித்தளமாக இருக்கிறது.

இன்றும் நகரப்புறங்களில் இருந்து ஒரு கொஞ்ச துரம் கிராமங்களை நோக்கி நடப்போம் என்றால் அன்று அன்று தமது வாழ்க்கைச் செலவை நடத்திச் செல்வதற்கும் ,பிள்ளைகளின் பசியை போக்குவதற்கும்வஅவர்களின் கற்றல் வசதிகளை நிறைவேற்றுவதற்கும் அல்லல்பட்டு கொண்டிருக்கும் அநேக குடும்பங்களை நாங்கள் காணலாம்.

இன்றைக்கும் தகரங்களாலும் தரப்பால்களாலும் பழைய சேலைகளாலும் பொருத்தப்பட்ட குடிசைகளும், பல நாட்களாக அடுப்பே எரியாத அடுப்படிகளும், தோல் சுருங்கி குழி விழுந்த கண்களுமாய் அடுத்த நேரத்திற்கு என்ன செய்வது என்று தெரியாமல் ஏங்கிக் கொண்டிருக்கும் பலரை தினம்தினம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அவர்களுக்காக ஏதாவது செய்து விட வேண்டும் என்ற ஆதங்கத்தின் பிரதிபலிப் பாக உருவானது தான் ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் நிறுவனம். எங்களோடு தங்கள் அன்பின் கரங்களையும் இணைத்து கொண்டு நன்கொடையாளர்களின் கரங்களை இறுகப் பற்றிய படி வேகமாக நடந்து கொண்டிருக்கிறோம்.



இந்தப் போர் ஜெஜீவனை ஓர் அங்கவீனமுள்ளவன் ஆக மாற்றி இருக்கிறது . ஆனால் இறைவன் மக்களுக்கு அளித்த அருங்கொடை ஜீவன். நெஞ்சம் முழுதும் மக்களின் அன்பை சுமந்தபடி எப்போதும் தன் மக்களைப் பற்றி சிந்திக்கும் ஓர் மகனாக, நல்ல சகோதரனாக பலருக்கு விளங்குகிறார்.

சமூகத்தில் பலதரப்பட்ட நிறுவனங்கள் இருந்தாலும் ஜீவ ஊற்று அன்பின் கரங்கள் போன்ற நிறுவனங்களை மக்கள் எப்பொழுதும் நேசிக்கின்றனர் அவர்களோடு சேர்ந்து பயணப்பட விரும்புகின்றனர். எந்தவித இன மத பேதங்களும் அற்று இவர்களால் செய்யப்படுகின்ற இந்த வர்ற பணியானது பல மக்களது வாழ்வில் வெளிச்சத்தை உண்டு பண்ணும் என்பதில் ஐயமில்லை.

# கேள்விக்குறியாகும் மனித வளங்கள்

**மனித வளமானது தன்னுடைய சமூக சமய நிலைமைகளில் ஏற்படுத்தும் தாக்கமானது, அந்த நாட்டின் பொருளாதார கட்டமைப்பிலும் , நாட்டின் சமநிலை தன்மையிலும் தாக்கம் செலுத்துகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் பொருளாதார பலமாக இயற்கை வளங்கள் நிறைந்திருப்பினும் , நாட்டின் அரசியல் செல்வாக்கு வளங்களின் பாதுகாப்பு நுகர்வு அபிவிருத்தி ஏற்றுமதி இறக்குமதி என்பவற்றில் தாக்கத்தினை செலுத்துகின்றது.**





லதா கந்தையா

இயற்கை வளங்களுக்குள் பௌதிக வளங்கள் எவ்வளவு முக்கியத்துவம் உடையதோ, அதே வகை முக்கியத்துவத் தினை மனித வளமும் தன்னகத்தை கொண்டுள்ளது. மனித வளம் பௌதிக வளத்தையே மாற்றி அமைக்கும் சக்தி மிக்கதாகவும் பொருளாதார கட்டமைப்பு மற்றும் அரசியல் குடியல் வாழ்வியல் என அத்தனை அம்சங்களுக்கும்

முன்னிலை வகிக்கும் மாற்றத்தை உண்டாக்கும் சக்தியாக மாறியிருக்கிறது.

மனித வளமானது தன்னுடைய சமூக சமய நிலைமைகளில் ஏற்படுத்தும் தாக்கமானது, அந்த நாட்டின் பொருளாதார கட்டமைப்பிலும் , நாட்டின் சமநிலை தன்மையிலும் தாக்கம் செலுத்துகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் பொருளாதார பலமாக இயற்கை வளங்கள் நிறைந்திருப்பினும் , நாட்டின் அரசியல் செல்வாக்கு வளங்களின் பாதுகாப்பு நுகர்வு அபிவிருத்தி ஏற்றுமதி இறக்குமதி என்பவற்றில் தாக்கத்தினை செலுத்துகின்றது.

அரசியல் செல்வாக்கு நாட்டின் சகல துறைகளுக்கும் செல்வாக்கு செலுத்துதல் உலகப் பொது நடைமுறையாக இருந்த போதிலும், இலங்கையை பொறுத்தவரை பெரும் பகுதி மக்கள் கூட்டத்தினை கொண்ட சிங்கள இனமே ஆதிக்கம் செலுத்துகின்றது. அரசியலமைப்பிலும் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. இது சிறுபான்மை இனங்களாக விளங்கும் தமிழர் மற்றும் முஸ்லிம், பேகர் இன மக்களிடமும் தாக்கத்தினை செலுத்துகிறது.

இலங்கை அரசாங்கத்தினை இயக்கும் சக்தியாக பௌத்த சமயம் விளங்குவதால் பௌத்த மதப்பரம்பலில் மேற்கொள்ளும் விகாரை அமைப்புகள் நிலப்பிடிப்புகள். சிறுபான்மை மக்களின் நில உடமைகளின் அபகரிப்பையும், அத்துமீறிய குடியேற்ற நடவடிக்கைகளும் உள்நாட்டுக்குள் கிளர்ச்சிகளையும் கலகங்களையும் உருவாக்கியது. இந்த காரணங்களால் நீர் வளர்த்தாலும் கடல் வளர்த்தாலும் வளங்களால் கொட்டி கிடக்கும் இலங்கை திருநாடு உலக வளர்ச்சியோடு ஒட்டிக் கொள்வதற்கு பெரும்தடையாக அமைந்தது. பெரும் பொருளாதார பின்னடைவுக்கும் காரணமானது.

கடந்த 30 வருட காலத்துக்கு மேற்பட்ட ஆயுதப்போர் உள்நாட்டில் பௌத்த மதத்தின் ஆதிக்கத்தினையும் அரசியலில் அது செல்வாக்கு செலுத்திய விளைவுகளையும் எடுத்துக்கூறும். மட்டுமன்றி போருக்கு பிற்பட்ட காலத்திலும் விகாரர்களாலும் நில அபகரிப்பாலும் சிறுபான்மை குடிகள் பெரிதும் பாதிப்படைகின்றன. இதன் விளைவாக சிறுபான்மை சமூகத்தினர் தமக்குரிய வழிபாட்டு தலங்களை, நிலங்களை இழந்து வருகின்றனர் இது இவ்வாறு இருக்க அரசிடம் நீதி நியாயங்களை நேரடியாக கேட்டும். தமிழ் சமூகம் ஆயுதப்போரிலும் சரி, அகிம்சைப்போரிலும் சரி ஆர்ப்பாட்டங்கள் பேரணிகளை நடத்தி தமக்கான நியாயத்தை கேட்கும் எந்த வடிவத்திலும் சரி தோல்விகளையே சந்தித்து வருகிறது இதற்கு என்ன காரணம் ஆராயின் தமிழர்கள் தமக்கு தாமே பிரித்தாலும் மனப்பாங்குடன் இருப்பதும் தலைமத்துவதற்கு போட்டியிடம் மனப்பாங்குடன் உள்ளவர்கள், இக்கட்டில் தப்பித்துக் கொள்ளல் என பல்வேறு வகையிலான பொறுப்பு கூறலற்ற செயற் பாடுகள் தமிழ் சமுதாயத்தின் வீழ்ச்சிப் படிகளாக அமைகின்றன.

உலக நாடுகளங்கம் தமிழர்கள் பரந்து வாழ்ந்து வந்தாலும் தமிழர்களாக குரல் எழுப்பி நீதி கிடைக்கும் சக்தி மிக்க தேசாந்திர சக்தி இன்னுமே தமிழர்களுக்கு வாய்க்கவில்லை. சுருங்கச் சொன்னால் தமிழர்கள் என்ற இன உணர்வோடு ஒன்றித்த நாடுகள் உலக நாடுகளில் எவையும் இல்லை. இருக்கும் அயல் நாட்டு தமிழின சக்திகளிடமும் அயல் நாட்டுக்கான நியாயத்தை பெற்றுக் கொடுக்கும் சக்தி இல்லை.

இவ்வாறான நிலையில் ஆதிக்க சக்திகளின் கைகள் ஓங்கும்போது எல்லாம் தமிழில் புத்திஜீவிகள் ஒரு சமசர சமரசத்துக்குள் நுழைந்து விடல் அல்லது சோரம் போதல், தங்கள் தன்மைகளை இழத்தல், தற்காத்துக் கொள்ள புகலிடங்கள் தேடி வெளிநாடு செல்லும் என வழி வழியாக இந்த அவல நிலைகள் தொடர்கின்றன.

ஒரு வகையில் வசதி வாய்ப்பு மிக்கவர்கள் புலம்பெயர்ந்தும் சரணாகதியாகியும் வாழ்வைத் தொடர, தனது இனத்தாலும் வெறுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, வாழ்வதற்கு வேறு வழி வகையற்று, பொருளாதார நிலையிலும் பாதுகாப்பு நிலைகளாலும் பின்தள்ளப்பட்டு உயிர் அச்சுறுத்தல் காரணமாகவும் பலர் தமது இயல்பு அடையாளங்களை தொலைத்து வாழ்கிறார்கள்.

போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் பிரித்தானியரின் ஆதிக்க காலத்தில் எவ்வாறு தமது தேவைகளுக்கும் படிப்புக்கும் என கத்தோலிக்கம் மற்றும் கிறிஸ்தவ மதங்களை உள்வாங்கி தமிழர்கள் பிற மதத்தை தழுவிக் கொண்டார்களோ, அதே போல இல்லாமல் எந்தவித சந்ததியும் இன்றி தமிழினம் தன் அடையாளத்தை பிறிதொரு வகையில் இழந்து வருகிறது.

தனியே இன விகிதக் குறைவு புலம் பெயர்தலால் என நினைத்துக் கொண்டிருக்கும் எம்மவர்க்கு இது எந்தவித கட்டாயமும் இல்லாமல், சுய விருப்போடு, இலகுவான முறையில் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒரு தமிழன் கத்தோலிக்க மதத்தையோ கிறிஸ்தவ மதத்தையோ பின்பற்றும் போது அவன் கிறிஸ்தவனாக கருதப்பட்டாலும் இன ரீதியாக தமிழனாகவே அடையாளப்படுத்தப்படுகிறான் கனடா சுவிஸ், ஜெர்மன், லண்டன் என எந்த நாட்டுக்குச் சென்றாலும் அவர்கள் தமிழர்களாகவே கருதப்படுகிறார்கள். எந்த வகையிலும் தமிழர்கள் இன அடையாளத்தை இழந்து விடுவதில்லை .

ஆனால், இலங்கையில் ஆதிக்க மதமாக பௌத்தமிருந்த போதிலும் தமிழர்கள் பின்பற்றுவதில்லை. சிங்கள இனத்தவரே தமிழர்கள் ஒரு தமிழர் ஒருவர் திருமணம் செய்தாலும் அவருடைய அடையாளம் தமிழர் எனவே அடையாளப்படுத்தப்படுகிறது.

ஆனால்,, இஸ்லாமியர் ஒருவரை திருமணம் செய்யும் தமிழ் ஆணோ பெண்ணோ முதலில் செய்வது தங்கள் பெயரை இஸ்லாமியப் பெயராகமாற்றிக் கொள்வது. இங்கு ஒரு சிறப்பு சலுகையாக இஸ்லாமிய மதத்தை தழுவும் தமிழன் ஒருவன் தனது பெயரை மாற்றி இஸ்லாமியர் ஒருவரை திருமணம் செய்யும் போது அவர் உடனடியாக முஸ்லிமாக அடையாளப்படுத்தப்படுகிறார்.

சடுதியாக இடம்பெறும் இந்த மாற்றம் பற்றி யாருமே சிந்திப்பதற்கில்லை இதைப் பற்றி எமது தமிழ் தலைவார்களோ வாக்கு கேட்டு வரும் தமிழ் வேட்பாளர் பெருங்குடிகளோ பேசியதும் இல்லை. புத்திஜீவிகள் இது பற்றி கவனத்தில் கொள்வதுமில்லை. இதில் வேடிக்கையும் கவலைக்கிடமும் என்னவெனில் இந்த மாற்றத்தால் தமிழராக இருந்து முஸ்லிம் இனமாக மாறிவிடும் ஒருவரின் வாக்கு முஸ்லிம் இனத்துக்கே சென்றடைகிறது.

உயிர் அச்சுறுத்தல், நிலமின்மை, சீதனப் பிரச்சனை, வீட்டுத்திட்ட வசதிகளில்லாத காரணங்கள் மற்றும் விரும்பிய திருமணம் என்ற வகையில் இந்த சலுகைகளை பெறுவதற்காக தமிழின வறுமை குடிகள், தமிழர்களால் கவனிப்பாரற்ற தமிழர்கள் இவ்வாறு இன மாற்றத்தினை நாடுகிறார்கள்.

கொடுமை என்ன எனில் இருநூறு ஆண்டுகளாக இந்தியாவில் இருந்து வந்த மலையாக மக்களை தமிழர்கள் என யாருமே இன்றுவரை பதிவு செய்வதில்லை. அவர்களை இந்திய தமிழர்கள் என்கின்ற அடையாளத்தோடு தான் இன்றும் புறந்தள்ள படுகிறார்கள்.

ஆனால் இஸ்லாமிய மார்க்கத்தினை பின்பற்றுமொரு தமிழன் தன் பெயரை மாற்றுவதுடன், சடுதியாக இனமும் மாற்றப்படுகிறான். இதை யாரும் கண்டு கொள்வதில்லை. இது தமிழர்வாழும் பகுதிகளான நீர்கொழும்பு, புத்தளம், மட்டக்களப்பு, மன்னார்,புத்தளம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஏன் யாழ்ப்பாணத்தையும்விட்டு வைக்கவில்லை.

இனமாற்றத்திற்கும் தமிழர் பொருளாதாரத்திற்கும், அரசியலுக்கும் சமுக கட்டமைப்புக்கும் என்ன சம்மந்தம் என்ற கேள்வி எழக்கூடும்.

சரிந்து கொண்டிருப்பது இன அடையாளம் மட்டுமல்ல. இனத்தின் வேர்களும் வாக்குகளும் இனத்தின் பொருளாதாரக் கட்டமைப்பும் இனத்துக்குரிய மனித வளமுமே.

இனமிழந்தால் அங்கு வெறுமையில் எதைக்காண்பதோ?


# தமிழர் பொருண்மியத்தில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க...

## கட்டணவிபரம்

| | கறுப்பு வெள்ளை | வர்ணம் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.10,000/- | ரூ.20,000/- |
| அரைப்பக்கம் | ரூ.6,000/- | ரூ.12,000/- |
| காற்பக்கம் | ரூ.3,500/- | ரூ.8,000/- |
| வரி விளம்பரம் | இலவசம் | இலவசம் |

தமிழர் பொருண்மியம்,
கிறீன் மீடியா ஹவுஸ்,
68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

வாட்ஸ் அப் இலக்கம் +94 777 920 384

# நலமும் நாவலும்

**காற்று கால சீசனில் கிடைக்கும் பழங்களில் முக்கியமானது, நாவல் பழம். உடலின் பல்வேறு பிரச்னைகளை போக்கும் அருமருந்தாக இது விளங்குகிறது, இந்த பழத்தில் விட்டமின் ஏ, சி மற்றும் கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து, பொட்டாசியம் போன்றவை நிறைந்துள்ளன**

பூரணி



நமது கிராமங்களில் குளக்கரை ஆற்றங்கரையில் மற்றும் சாலை ஓரங்களில் மட்டும் வளர்ந்து உள்ள நாவல் மரம் நிச்சயமாக எல்லா வகை மண்ணிலும் வளர்க்கலாம். நிழல் தரும் நாவல் நமக்கு பழம் மற்றும் மரப்பட்டை மருந்துக்கும், இலைகள் கால்நடைக்கும் உணவாகவும் பயன்படுவது கண்கூடு.

நாவல் மரமானது நாகமரம், நாகப்பழ மரம், சரிதலம், ஆருகதம் எனவும் ஆங்கிலத்தில் ஜாமன், பிளாக் ப்ளம், ஜம்பலம் எனவும் அழைக்கப்படுகிறது.

ஆண்டுக்கு ஒருமுறை தை,மாசி மாதங்களில் இலைகளை உதிர்க்கும் நாவல் மரம் பங்குனி,சித்திரை, வைகாசி மாதம் பூப்பதும் அதன் பின் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் பழங்களைத் தருவதும் வாழக்கை.



பெரும்பாலும் விதை மூலம் வளரும் அல்லது ஒட்டுச்செடிகள்மூலம்இனப்பெருக்கம் செய்யப்படும் நாவல் மரம் நட்ட 8 முதல் 10 ஆண்டுகளில் விளைச்சல் தரும். ஒரு மரத்துக்கும் இன்னொரு மரத்துக்கும் 12 மீட்டர் இடைவெளிவிட்டு நடப்படும் நாவல் மரம் ஆண்டுக்கு 50 முதல் 80 கிலோ வரை பழங்கள் தருகிறது.

அரிதாக கிடைக்கும்பழங்கள்வரிசையில் உள்ள நாவலை அபரிமிதமாக கிடைத்திட செய்ய பல இடங்களில் இவற்றை நட்டாலே போதும். பலராலும் இதன் பயன்பாடு முழுமையாக மேற்கொள்ளப்பட இதுவே வழி.

நாவல் பழத்தை உப்பில் போட்டு சாப்பிடுவதால் தொண்டைக் கட்டு உண்டாவது குறையலாம். ஜம்பு நாவல் பழத்தினால் நீர்வேட்கை நீங்கும். பழுக்காத காய்களை நன்கு உலர்த்திப் பொடி செய்து ஒரு தேக்கரண்டி எடுத்து மோரில் கலந்து அருந்த வயிற்றுப்போக்கு குணமாகும்.

## சர்க்கரை வியாதிக்கு விதை

நாவல் பழத்தைச் சப்பித்தின்ற பின்பு கிடைக்கும் கொட்டையை நன்கு நிழலில் உலர்த்தி பொடி செய்து சலித்துக் கொண்டு தினந்தோறும் அதனை 2 ரூ 4 கிராம் வீதம் மூன்று வேளை எனத் தண்ணீரில் கலந்து அருந்திவர, சர்க்கரை நோய் (னுயைடிநவநள) குறையும் என நம்பப்படுகிறது. விதையைப் பொடித்து மாம்பருப்புத் தூளுடன் சேர்த்துத்தர சிறுநீரைப் பெருக்கும். இக்கொட்டையை மிகுந்த அளவில் உண்ண நஞ்சாக அமையும். இது பித்தத்தையும் போக்கும்.

## இலை

நாவல்கொழுந்துச்சாறு, மாவிலைச்சாறு ஆகிய இரண்டையும் கலந்து கடுக்காள் பொடியுடன் சேர்த்து ஆட்டுப்பாலில் கலக்கித்தர, சீதக்கழிச்சல் போகும். நாவல் மரத்தின் இலைக்கொழுத்து, மாவிலைக்கொழுத்து ஆகிய இரண்டையும் சம அளவில் எடுத்து மைபோல் அரைத்து தயிரிலோ, மோரிலோ கலந்து சாப்பிட வயிற்றுப்போக்கு, குருதிச் சீதபேதி குணமாகும். இதற்கு மாவிதை, நாவல் விதை ஆகிய இரண்டையும் உலர்த்திப் பொடித்து சம அளவில் மோரில் கலந்தும் அருந்தலாம். நாவற்கொழுந்தை ஏலத்துடன் சேர்த்து வைத்து ஆட்டுப்பாலில் கலந்துதர சரியாக் கழிச்சல் போகும்.

பட்டை

நாவல் மரப்பட்டை குரல் இனிமையை



அதிகரிக்கும். இது ஆஸ்துமா, தாகம், களைப்பு குருதி சீதபேதி, பெரும்பாடு, ஈளை இருமல் ஆகிய நோய்களுக்கும் நல்லது. குழகுழத்த பல்ஈறு நோய்க்கும், நாக்கு, வாய், தொண்டைப் புண்களுக்கும் இதன் சாற்றைப் பயன்பத்தி வாய் கொப்புளிக்கலாம். மரப்பட்டையை இடித்து சலித்து எருமைத் தயிரில் சாப்பிட பெண்களின் உதிரப்போக்கு குணமாகும். குழந்தைகளுக்கு உண்டாகும், கண மாந்தம், வயிற்றுப்போக்கு, குருதி சீதபேதி ஆகியவற்றுக்கு நாவல் மரப்பட்டையை வெள்ளாட்டுப்பாலுடன் சேர்த்து நன்கு காய்ச்சி வடிகட்டி வேளைக்கு சங்களவு என மூன்று முறை தரலாம். மரப்பட்டைத் தூளை இரத்தம் வழிகின்ற புண்ணில் தூவ குணமாகும். பட்டைக் கஷாயத்தைக் கொண்டு புண்களையும் கழுவலாம்.

### வேர்

மரவேர், வாதம், கரப்பான், நீரிழிவு, குருதி, சீதபேதி, வாதகரம், மேகம், செரியாமை ஆகியவற்றைப் போக்கும் பட்டையை அரைத்து அடிபட்ட வீக்கம், கட்டி முதலியவற்றின் மீது போட அவை அமுங்கும். வேர் வளிநோய்கள், கரப்பான், புண், நீரிழிவு, குருதிக்கழிச்சலுக்கு உதவும். நாவல் வேர் ஊறிய நீர் கழிச்சல், நீரிழிவுக்கு நல்லது. உடலுக்குக் குளிர்ச்சியையும் ஆண்மையையும் தரும். சுரம், மாந்தம் ஆகியவற்றைப் போக்கும்.

காற்று கால சீசனில் கிடைக்கும் பழங்களில் முக்கியமானது, நாவல் பழம். உடலின் பல்வேறு பிரச்னைகளை போக்கும் அருமருந்தாக இது விளங்குகிறது, இந்த பழத்தில் விட்டமின் ஏ, சி மற்றும் கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து, பொட்டாசியம் போன்றவை நிறைந்துள்ளன.

நாவல் மரத்தின் பழம், இலை, மரப்பட்டை மற்றும் விதை என அனைத்துமே, மருத்துவ குணம் மிக்கது.

நாவல் பழத்தில் உள்ள நார்ச்சத்து, செரிமானத்துக்கு பக்க பலமாக உள்ளது. மலச்சிக்கலுக்கு தீர்வு தரும். நாவல் பழ பானம் உப்பு சேர்த்து அருந்த, வயிற்றுப் போக்கு உடனே நிற்கும்.

நாவல் மரத்தின் கொழுந்து இலைகளை நன்றாக இடித்து எடுத்து, தினமும், ஒரு தேக்கரண்டி அளவு, இரண்டு வேளை வீதம், மூன்று நாட்களுக்கு சாப்பிட்டு வந்தால், வயிற்றுப்போக்கை குணப்படுத்தலாம்.

பித்தத்தையும், ரத்த சோகையையும் குணப்படுத்தும். சிறுநீரக கற்களை கரைப்பதிலும் பெரும் பங்காற்றுகிறது. தினமும் இரண்டு அல்லது மூன்று நாவல் பழம் சாப்பிட்டு வந்தால், மூன்று மாதத்தில் மூல நோய் குணமாகும்.

ரத்தத்தை சுத்தமாக்கும் தன்மை, நாவல் பழத்திற்கு உண்டு. இதனால், தொழுநோய் குணமாக, சாப்பிட சிபாரிசு செய்கின்றனர். இந்த பழத்தில் கால்சியம் மற்றும் இரும்புச்சத்து அதிகம் உள்ளதால், எலும்பு தேய்மான நோய் தவிர்க்கப்படும்.

ஆன்டி ஒக்சிடென்ட், பாலிபினால்ஸ் உள்ளிட்டவை அடங்கிய நாவல் பழத்தை சாப்பிட்டால், இதய நோய்களுக்கான அபாயம் குறைகிறது. இதில் உள்ள வைட்டமின் சி, சத்து சரும ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. குறிப்பாக, சூரியனின் புற ஊதா கதிர்வீச்சு மற்றும் மாசுபாடு ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு தருகிறது.



பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதல் பிரச்னையை சரி செய்ய, நாவல் பழ கொட்டையை அரைத்து, துணியில் சலித்து, அதை ஒரு தேக்கரண்டி வாழைப் பழத்துடன் அல்லது நீர் மோரில் கலந்து, நான்கு நாட்கள் சாப்பிட சரியாகும்.

மருந்து மாத்திரைகளால் குறையாத சர்க்கரை அளவை, பழமையான நாவல் மர வேர் பட்டை மற்றும் வேப்ப மர பட்டை சூரணத்தை வெந்நீரில் கொதிக்க வைத்து, காலையில் உணவுக்கு முன் சாப்பிட்டு வர குறையும்.

பல் ஈறுகளில் ஏற்படும் ரத்த கசிவை நிறுத்த, நாவல் மர பட்டை சூரணத்தை, ஒரு தேக்கரண்டி வெந்நீரில் கொதிக்க வைத்து, அதை ஐந்து முறை வாய் கொப்பளிக்க சரியாகும் ஈறுகளும் பலமடையும்.

நாவல் பழத்தின் விதையில், 'ஜம்போலைன்' என்ற குளுக்கோசைட் இருக்கிறது. நீரிழிவு நோயாளிகள், நாவல் பழத்தின் விதைகளை நன்கு இடித்து தூளாக்கி, தினமும் ஒரு கிராம் வீதம் காலையிலும், மாலையிலும் தண்ணீருடன் கலந்து உட்கொண்டு வர, நீரிழிவு நோய் குணமாகும்.

நாவல் பழங்களை மிகுதியாக சாப்பிடும் பட்சத்தில், இருமல், தொண்டைக்கட்டு, பல் கூச்சம் மற்றும் செரிமானப் பிரச்னைகள் உண்டாகலாம். ஆகவே, மிதமான எண்ணிக்கையில் இதை எடுத்துக் கொள்ளலாம்.

நாவல் பழங்களை வெறும் வயிற்றில் சாப்பிடக் கூடாது. பழம் சாப்பிட்ட ஒரு மணி நேரத்திற்கு முன் அல்லது பின் பால் சாப்பிடக் கூடாது.

# காலநிலைக்கு சீரமைவான விவசாய திட்டம் சிறந்த விவசாயிகளை மதிப்பளித்தல் 2024




றஜிதன் மகேஸ்வரன்
தலைவர்
இந்திரா குழுமம்


## காலநிலை மாற்றம்

இயற்கையாக பல்வேறு காரணங்களாலும் பல்வேறு மனித செயல்பாடுகள் காரணமாகவும் காலநிலை மாற்றம் என்பது மிக விரைவாக நடந்து வருகிறது. மேற்படி மாற்றங்களால் சமூக பொருளாதார கலாச்சார மாற்றங்கள் மனித வாழ்வில் ஏற்படுவது அவதானிக்கப்பட கூடிய அளவுக்கு அதிகரித்துள்ளது. முன்னறிவிப்பில்லாத எதிர்பார்க்க முடியாத கட்டுப்படுத்த முடியாத காலநிலை மாற்றங்களால் பல்வேறு பொருளாதார அழிவுகள் உயிர் அழிவுகள் என்பன தற்காலத்தில் அடிக்கடி பத்திரிகை வானொலி தொலைக்காட்சி செய்திகளாகிவிட்டன. ஏனைய தொழில்துறைகள் காலநிலை மாற்றங்களினால் பாதிக்கப்படுவதை






காட்டிலும் காலநிலை வானிலை உடன் நேரடி தொடர்புடைய விவசாயத்துறை மிகவும் அதிகமாக பாதிப்பு அடைகிறது

காலநிலைக்கு சீரமைவான விவசாய திட்டம் (Climate Smart Agriculture Project)

மழைவெள்ளம்புயல்போன்றகாலநிலை மாற்ற செயல்பாடுகளுக்கு இலகுவில் பாதிப்படைகின்ற பாரம்பரிய விவசாய முறைகளில் இருந்து மாறுபட்ட நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய காலநிலை மாற்றங்களால்குறைந்த அளவு இழப்புகளை சந்திக்கக்கூடிய அல்லது இழப்புகளை இல்லாமல் ஆக்குகின்ற செயல்பாடுகளை விவசாயிகளுக்கு சொல்லிக் கொடுக்கின்ற செய்து காட்டுகின்ற நிகழ்ச்சி திட்டம் கால நிலைக்கு சீரமைவான விவசாய திட்டம்



எனப்படும்.

நீரை சிக்கனப்படுத்துகின்ற சொட்டு நீர் பாசன திட்டம் மின்சாரம் ஏரு எரிபொருளில் தங்கி இருக்காத சூரிய படல் நீர் பம்பி, மற்றும் உமி கரி மண்புழு உரம் போன்ற இறக்குமதி பசலைகளில் தங்கி இருக்காத பசலை தொழில்நுட்பங்கள் திட்டத்தில் அடங்கும் சில தொழில்நுட்பங்கள் ஆகும்

## வேர்ல்ட் விஷன் மற்றும் இந்திரா குழுமம்

வேர்ல்ட் விஷன் நிறுவனம் இலங்கையில் 10 மாவட்டங்களில் மேற்படி காலநிலைக்கு சீரமைவான விவசாய திட்டத்தினை நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஏனைய மாவட்டங்களில் நேரடியாக இந்தத் திட்டத்தில் ஈடுபடும் நிறுவனம் வடக்கு கிழக்கில் கிளிநொச்சி யாழ்ப்பாணம் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பங்காளர்களுடன் இணைந்து திட்டத்தினை செயல்படுத்துகின்றது. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இந்திரா குழுமம் தொழில்நுட்பங்காளராக இணைந்துள்ளது.

வேர்ல்ட் விஷன் நிறுவனம் மற்றும் இந்திரா குழுமம் (தொழில்நுட்ப பங்காளர்) என்பன இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுகளில் கால நிலைக்கு சீரமைவான விவசாய திட்டம் என்ற கருப்பொருளில் விவசாயிகளுடன் இணைந்து 2021 ஆம் ஆண்டிலிருந்து வேலை செய்து வருகின்றன. இரண்டு ஆண்டுகள் வெற்றிகரமான நிறைவின் பின்னர் தற்பொழுது மூன்றாம் ஆண்டில் நிகழ்ச்சி திட்டம் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது



அந்த வகையில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் சிறந்த விவசாயிகளாக தெரிவு செய்யப்பட்ட ஆறு பேர் சென்ற ஆறாம் மாதம் விருது சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார்கள்.

நேற்றைய தினம் 12.09.2024 அன்று காலை 10 மணிக்கு மங்கள விளக்கு ஏற்றுதலுடன் ஆரம்பித்த நிகழ்வில் கண்டாவளை பிரதேசத்தில் 2023 ஆம் ஆண்டு மேற்படி திட்டத்துடன் இணைந்து செயல்பட்ட விவசாயிகளில் சிறந்த விவசாயிகளாக மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டு விருது சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அவர்களுக்கு விருதுகள் சான்றிதழ்களுக்கு மேலதிகமாக வேர்ல்ட் விஷன் நிறுவனத்தினால் 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான விவசாய உபகரணங்கள் வாங்கக்கூடிய பரிசு கூப்பன்கள் வழங்கி வைக்கப்பட்டன. மேலும் மூன்று பேர் பெறுமதியான பரிசில் வழங்கி கவுரவிக்கப்பட்டார்கள்.

நிகழ்வில் பிரதேச விவசாய போதனாசிரியர் திருமதி சரண்யா, பிரதேச கிராம சேவையாளர் , வேர்ல் விஷன் நிறுவன முகாமையாளர் திருமதி மைக்தலின் குயின்டர்ஸ் அவர்கள் உட்பட அபிவிருத்தி அலுவலர்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் இந்திரா குழுமம் நிறுவனத்தின் இயக்குனர், அலுவலர்கள் பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் தகவல்களை பகிர்வதற்கான புதிய விதிகள்

## பகுதி – 02




**தொழில்நுட்ப உட்கட்டமைப்பு:**

• இயங்குதளத்தை உருவாக்குதல்: தரவுகளின் அளவு மற்றும் உணர்திறனைக் கையாள பாதுகாப்பான மற்றும் திறமையான இணைய தளத்தை உருவாக்குவது மிகவும் முக்கியமானது. இதற்கு தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவத்தில் முதலீடு தேவை.

• சைபர் பாதுகாப்பு கவலைகள்: சேகரிக்கப்பட்ட தனிப்பட்ட மற்றும் நிதித் தரவுகளின் பரந்த அளவைப் பாதுகாப்பது மிக முக்கியமானது. தரவு மீறல்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத அணுகலைத் தடுக்க, வலுவான இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அரசாங்கம் முதலீடு செய்ய வேண்டும்.

**இணக்கம் மற்றும் அமுலாக்கம்:**

• ஒத்துழைப்பை ஊக்குவித்தல்: தனியார் வங்கிகள் மற்றும் அரசு நிறுவனங்கள் உட்பட அனைத்து கட்டாய நிறுவனங்களிடமிருந்தும் நிலையான ஒத்துழைப்பைப் பெறுவது சவாலானது. அரசாங்கம் தெளிவான வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்த வேண்டும் மற்றும் இணங்காததற்கு அபராதம் விதிக்க வேண்டும்.

• திறன் மேம்பாடு: புதிய தரவுப் பகிர்வுத் தேவைகளுடன் திறம்பட இணங்க சில நிறுவனங்களுக்கு கூடுதல் பயிற்சி மற்றும் வளங்கள் தேவைப்படலாம். சுமூகமாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய அரசு ஆதரவு அளிக்க வேண்டும்.

**சட்ட மற்றும் ஒழுங்குமுறை சிக்கல்கள்:**

• தனியுரிமைக் கவலைகள்: தரவு தனியுரிமை தொடர்பான பொதுக்கவலைகளை அரசாங்கம் தீர்க்க வேண்டும். பொது நம்பிக்கையை உறுதிப்படுத்த தெளிவான தரவு பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் வலுவான தரவு பாதுகாப்பு நடவடிக்கைகள் அவசியம்.

• தரவு பகிர்வு வரம்புகள்: சில வகையான தரவுகளை எவ்வாறு பகிரலாம் என்பதில் சட்டரீதியான கட்டுப்பாடுகள் இருக்கலாம். சேகரிக்கப்படும் தகவல்கள் தற்போதுள்ள தரவு தனியுரிமைச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குவதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

ஒட்டுமொத்தமாக, தரவுத் தரத்தை உறுதி செய்தல், பாதுகாப்பான தொழில்நுட்ப உட்கட்டமைப்பை உருவாக்குதல், நிலையான இணக்கத்தை அடைதல் மற்றும் சாத்தியமான சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தடைகளை வழிநடத்துதல் ஆகியவற்றில் அரசாங்கத்தின் உண்மையான சவால்கள் உள்ளன. புதிய தகவல் பகிர்வு தேவைகளை திறம்பட செயற்படுத்துவதற்கு இந்த சவால்களை வெற்றிகரமாக சமாளிப்பது முக்கியமானதாக இருக்கும்.

கொள்கை அமுலாக்கத்தில் சீரான தன்மை இலங்கையில் ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது.

இந்தப் புதிய தகவல் பகிர்வுத் தேவையின் வெற்றி குறித்த சரியான கேள்வியை இது எழுப்புகின்றது. சவால்கள் மற்றும் வெற்றிக்கான சாத்தியக்கூறுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**நிலைத்தன்மைக்கான சவால்கள்:**

• சீரற்ற அமுலாக்கத்தின் வரலாறு: கொள்கை அமுலாக்கத்தில் கடந்த கால அனுபவங்கள், பின்பற்றப்படும் இந்த புதிய தேவை குறித்து பொதுமக்கள் சந்தேகம் கொள்ள வழிவகுக்கும். நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவது முக்கியமானது.

• அரசியல் விருப்பம்: அரசாங்க மாற்றங்கள் முழுவதும் நிலையான அமுலாக்கத்தை பராமரிப்பது கடினமாக இருக்கலாம். அனைத்து அரசியல் கட்சிகளின் நீண்ட கால அர்ப்பணிப்பு அவசியம்.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

• வளக் கட்டுப்பாடுகள்: தேவைகளை திறம்பட செயல்படுத்தவும், தொடர்ந்து செயல்படுத்தவும் பணியாளர்கள், தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி ஆகியவற்றின் அடிப்படையில் வள வரம்புகளை அரசாங்கம் எதிர்கொள்ளக்கூடும்.

**வெற்றிக்கான சாத்தியம்:**

• வெளிப்படைத்தன்மை மற்றும் தகவல்தொடர்பு: புதிய தேவையுடன் தொடர்புடைய நோக்கம், நன்மைகள் மற்றும் தரவு பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய தெளிவான தகவல்தொடர்பு பொதுமக்களின் நம்பிக்கையை உருவாக்கி ஒத்துழைப்பை ஊக்குவிக்கும்.

• கட்டமாகச் செயல்படுத்துதல்: ஒரு பைலட் திட்டத்துடன் ஒரு கட்ட அணுகுமுறை, முழு வெளியீட்டிற்கு முன் செயல்படுத்தும் சவால்களைக் கண்டறிந்து எதிர்கொள்ள உதவும்.

• சுயாதீன மேற்பார்வை: இணக்கம் மற்றும் தரவுப் பாதுகாப்பைக் கண்காணிக்க ஒரு சுயாதீன அமைப்பை நிறுவுவது பொதுமக்களுக்கு உறுதியளிக்கும்.

• நன்மைகளில் கவனம் செலுத்துங்கள்: மேம்படுத்தப்பட்ட பொதுச் சேவைகள்

மற்றும் நியாயமான வரி முறை போன்ற பொதுமக்களுக்கு சாத்தியமான நன்மைகளை முன்னிலைப்படுத்துவது ஒத்துழைப்பை ஊக்குவிக்கும்.

### பொது மக்கள் ஏற்றுக்கொண்டு பின்பற்றும் முறைமை:

• பொதுக் கருத்து: திட்டத்தின் செயல்திறன் மற்றும் நேர்மையைப் பற்றிய பொதுமக்களின் கருத்து பின்பற்றப்படுவதை பாதிக்கும். வெளிப்படைத்தன்மை மற்றும் தெளிவான தொடர்பு முக்கியமானது.

• ஊக்கத்தொகைகள் மற்றும் அபராதங்கள்: முன்கூட்டியே இணங்குவதற்கான ஊக்கத்தொகைகளை வழங்குதல் மற்றும் இணக்கமற்ற தெளிவான அபராதங்களை நிறுவுதல் ஆகியவை பின்பற்றுவதை ஊக்குவிக்கும்.

• பயன்படுத்த எளிதானது: பயனர் நட்பு தளம் மற்றும் தரவு சமர்ப்பிப்பு பற்றிய தெளிவான வழிமுறைகள் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு இணக்கத்தை எளிதாக்கும்.

ஒட்டுமொத்தமாக, இந்த புதிய தேவையின் மூலம் வெற்றியை அடைவது, கடந்த கால முரண்பாடுகளை சமாளிக்கும் அரசாங்கத்தின் திறனைப் பொறுத்தது. வெளிப்படைத்தன்மை, தகவல் தொடர்பு, ஒரு கட்ட அணுகுமுறை மற்றும் பொது நலன்களில் கவனம் செலுத்துதல் ஆகியவை முக்கியமானவை. பொது மக்கள் பின்பற்றுவது, திட்டத்தில் அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கை மற்றும் இணக்கத்தின் எளிமையைப் பொறுத்தது.

இலங்கையில் புதிய தகவல் பகிர்வு தேவை வரி வசூல், கொள்கை உருவாக்கம் மற்றும் நிதிக் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதை கணிசமாக மேம்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இருப்பினும், வெற்றிகரமான செயல்படுத்தல் தரவு தரநிலைப்படுத்தல், இணையப் பாதுகாப்பு மற்றும் நிலையான அமுலாக்கம் போன்ற சவால்களை சமாளிப்பதைச் சார்ந்துள்ளது. தரவு பாதுகாப்பு, தெளிவான தகவல் தொடர்பு மற்றும் ஒரு கட்ட அணுகுமுறை ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், அரசாங்கம் பொதுமக்களின் நம்பிக்கையை உருவாக்கி ஒத்துழைப்பை ஊக்குவிக்க முடியும். இறுதியில், கடந்தகால முரண்பாடுகளைக் களைவதற்கும் இலங்கை மக்களுக்கு நன்மைகளை வெளிப்படுத்துவதற்கும் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பிலேயே இந்தத் திட்டத்தின் வெற்றி தங்கியுள்ளது.

### மாற்று அணுகுமுறை

அதிக/ உயர் மதிப்புள்ள பரிவர்த்தனைகளுக்கு மட்டும் பரிவர்த்தனை கண்காணிப்பைப் பயன்படுத்துதல் என்ற மாற்று முறையை அரசாங்கம் பரிசீலிக்கலாம்.

இலங்கையின் புதிய தகவல் பகிர்வு தேவை பல்வேறு நிறுவனங்களில் இருந்து தரவுகளை சேகரிப்பதில் கவனம் செலுத்துகின்றது. இந்த அணுகுமுறை நன்மைகளை அளிக்கும் போது, ஒரு மாற்று உத்தி மிகவும் திறமையானதாக இருக்கலாம்: அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகளுக்கு மட்டுமே பரிவர்த்தனை கண்காணிப்பைப் பயன்படுத்துதல். இரண்டு அணுகுமுறைகளின் விபரங்கள் இங்கே:

### தற்போதைய புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட அணுகுமுறை: பரந்த தரவு சேகரிப்பு

• **நன்மைகள்:**

• பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சாத்தியமான வரி ஏய்ப்பு பற்றிய பரந்த பார்வையை வழங்குகின்றது.

• முன்னர் அறியப்படாத நிதி இணைப்புகளை அடையாளம் காணலாம்.

• வரி வசூலுக்கு அப்பால் பரந்த கொள்கை உருவாக்கத்திற்குப் பயன்படுத்தலாம்.

• **தீமைகள்:**

• நிறுவனங்களுக்கும் அரசாங்கத்திற்கும் குறிப்பிடத்தக்க நிர்வாகச் சுமையை உருவாக்குகின்றது.

• தனிப்பட்ட தரவுகளின் பரந்த அளவிலான தனியுரிமை கவலைகளை எழுப்புகின்றது.

• தவறான பயன்பாட்டைத் தடுக்க வலுவான தரவு பாதுகாப்பு நடவடிக்கைகள் தேவை.

### மாற்று அணுகுமுறை: உயர் மதிப்பு பரிவர்த்தனை கண்காணிப்பு

• ஒரு குறிப்பிட்ட வரம்புத் தொகையைத் தாண்டிய நிதி பரிவர்த்தனைகளைக் மாத்திரம் கண்காணிப்பதாக அமைகின்றது.

• **நன்மைகள்:**

• நிறுவனங்களுக்கும் அரசாங்கத்திற்கும் நிர்வாகச் சுமையை குறைக்கின்றது.

• வரி ஏய்ப்பு அல்லது நிதிக் குற்றம் அதிக வாய்ப்புள்ள பகுதிகளைக் குறிவைக்கின்றது.

• சேகரிக்கப்பட்ட தரவின் அளவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தனியுரிமைக் கவலைகளைக் குறைக்கின்றது.

• **தீமைகள்:**

• சாத்தியமான வரி ஏய்ப்பு அல்லது சிறிய பரிவர்த்தனைகள் சம்பந்தப்பட்ட நிதிக் குற்றங்களைத் தவறவிடலாம்.

• செயல்திறன் மற்றும் தனியுரிமையை சமநிலைப்படுத்தும் பொருத்தமான வரம்பை அமைக்க வேண்டும்.

உயர் மதிப்பு பரிவர்த்தனை கண்காணிப்பை ஏன் கருத்திற் கொள்ள வேண்டும்?

அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகளில் கவனம் செலுத்துவது சாத்தியமான மாற்றாக இருப்பதற்கான சில காரணங்கள் இங்கே:

• செலவு-செயல்திறன்: குறைக்கப்பட்ட தரவு அளவு தரவு சேமிப்பு, மேலாண்மை மற்றும் பாதுகாப்புக்கான குறைந்த செலவுகளை கொண்டதாக அமையும்.

• இலக்கு அணுகுமுறை: நிதி முறைகேடுகள் அதிக ஆபத்து உள்ள பகுதிகளில் வளங்களை கவனம் செலுத்துகின்றது.

• தனியுரிமை இருப்பு: குறைந்த மதிப்புள்ள பரிவர்த்தனைகளில் தனிப்பட்ட தரவு சேகரிப்பைக் குறைக்கின்றது.

• செயற்திறன்: நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தின் நிர்வாகச் சுமையை குறைக்கின்றது.

### சரியான சமநிலையைக் கண்டறிதல்

சிறந்த அணுகுமுறை இரண்டுக்கும் இடையிலான சமநிலையில் இருக்கலாம். எனவே அரசாங்கம் பின்வருவனவற்றை கவனத்தில் எடுத்துக் கொள்ள முடியும்:

• அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகளுக்கு கடுமையான கண்காணிப்புடன் ஒரு அடுக்கு அமைப்பைச் செயல்படுத்தலாம்.

• ஆரம்ப இடர் மதிப்பீட்டிற்கு பரந்த தரவு சேகரிப்பிலிருந்து தரவைப் பயன்படுத்தவும், பின்னர் ஆழ்ந்த ஆய்வுக்கு அதிக ஆபத்துள்ள நபர்கள்/நிறுவனங்கள் மீது கவனம் செலுத்த முடியும்.

• சேகரிக்கப்பட்ட தரவுகளில் சந்தேகத்திற்கிடமான வடிவங்களை அடையாளம் காண தரவு பகுப்பாய்வு கருவிகளில் முதலீடு செய்தல் நல்ல பலனைத் தரும்.

இலங்கையின் புதிய தகவல் பகிர்வுத் தேவை வரி வசூலை மேம்படுத்துவதற்கும் நிதிக் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. இருப்பினும், அதிக மதிப்புள்ள பரிவர்த்தனை கண்காணிப்பில் மட்டுமே கவனம் செலுத்துவது மிகவும் திறமையான மற்றும் தனியுரிமை உணர்வுள்ள அணுகுமுறையாக இருக்கும். விரிவான மற்றும் இலக்கு கண்காணிப்பு ஆகியவற்றுக்கு இடையே சரியான சமநிலையைக் கண்டறிவது திட்டத்தின் வெற்றிக்கு முக்கியமானதாக இருக்கும்.

## இறப்பர் பாலில் விழுந்து மறைந்த கண்ணீர் - 02

# இரு நூற்றாண்டு கால றப்பர் தோட்ட தொழிலாளர்களின் சோகக் கதை

சங்கா சிங்ஹ ஆரச்சி

தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகளுக்காக தமிழ் மொழி மூல பாடசாலைகள் இருந்தாலும் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக அவர்களின் கல்வி நிலைமை மிகவும் கவலைக்குரிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது. பெரும்பாலான பாடசாலைகள் 10 ஆம் ஆண்டுவரை மட்டுமே கற்றல் செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. உயர்தர கற்கைகளுக்காக தோட்டத்திலிருந்து கடினமான பாதைகளினூடாக சுமார் ஆறு கிலோமீற்றர்களை கடந்து நகரின் பாடசாலைக்கு வர வேண்டும். ஆகையால் அவர்கள் கல்வியை இடையில் கைவிட்டு விட்டு தோட்டத்தில் பால் வெட்டுவதற்கும் அல்லது வேறு தொழில்களிலும் ஈடுபடுகின்றனர்.

### காணி மற்றும் வீட்டு உரிமை

பொதுவாக கடந்த இரு நூற்றாண்டு காலமாக காலனித்துவ ஆட்சியின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட லயன் காம்பரா என்ற 10 அடி சிறிய நிலத்திலே தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். தோட்டத்தில் வேலை கிடைத்தாலும் அங்கு சொந்த வீடோ அல்லது ஓர் அங்குல நிலமோ அவர்களுக்கு சொந்தமில்லை. பலர் லயன் அறைகளை தமது சொந்த நிதியில் அவற்றை புனர்நிர்மானம் செய்வதற்கும் மற்றும் லயன் அறைகளை வியாபித்துக் கொள்வதற்கான அனுமதிகள் மிக அரிதாகவே அவர்களுக்கு கிடைக்கின்றன.

'இச் சிறிய லயன் அறைத்தொகுதியிலே தான் ஆண் பெண் என இரு பாலாறும் வாழ்ந்து வருகின்றோம். சமைப்பதற்கு, பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுப்பதற்கு, நித்திரை கொள்வதற்கென அனைத்து தேவைகளையும் நாங்கள் பூர்த்தி செய்து கொள்வது இச்சின்னஞ் சிறிய அறையிலே தான். தோட்ட நிர்வாகத்திற்கு நாம் எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் அதனால் எவ்வித பலனும் இல்லையென பதுரளிய அஸ்க்வெலிய தோட்டத்தில் வசிக்கும் செல்வி கூறுகின்றார். சில தோட்ட நிறுவனங்கள் தொழிலாளர்களுக்கு எவ்வித வீட்டுத் தோட்டங்களையும் செய்வதற்கு அனுமதிப்பதில்லையுடன்



ஏதாவதொரு பயிர்செய்கை செய்யப்பட்டிருப்பின் பலவந்தமாய் அவற்றை பிடுங்கி எறிவதில் தயக்கம் காட்டுவதுமில்லை.

மின்சாரம், நீர் மற்றும் கழிப்பறை வசதிகள் மிகவும் குறைந்த மட்டத்திலே லயன் காம்பராக்களில் காணப் படுகின்றது. பாதுகாப்பற்ற மின் வழுங்கள் காரணமாக பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட மின்னொழுக்கின் காரணமாக லயன் அறைகள் எரிந்து சாம்பலானதில் அவர்கள் சேமித்து வைத்திருந்த அனைத்து பொருட்களையும் இழந்துள்ள தோட்ட தொழிலாளர்களின் துயர்நிறைந்த கதைகள் கடந்த நூற்றாண்டு காலம் முழுவதும் அனைத்து தோட்டங்களிலும் பார்க்கவும் கேட்கவும் முடிகிறது.

சில சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட இயற்கை அழிவுகள் காரணமாக தோட்ட தொழிலாளர்களுக்கு காணி கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமென்கிறார் நிவித்திகல தொலொஸ்வல தோட்டத்தின் மன்சில்மணி. 'கடந்த நாட்களில் வீசிய சூறாவளி காரணமாக கிரிபத்கல றப்பர் தோட்டத்தின் லயன் வரிசைக்கருகில் இருந்த அரச மரமொன்று முறிந்து விழுந்ததில் லயன் காம்பராக்களுக்கு பாரிய சேதம் ஏற்பட்டது. இருப்பதற்கு இடமின்றிய ஆறு குடும்பங்களுக்கு 10 பர்ச்சஸ் என்றடிப்படையில் காணித்துண்டுகள் வழங்கப்பட்டன." ஆனால் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ வீடொன்றை கட்டிக் கொள்வதற்கு அத்தொழிலாளர்களிடம் போதிய பண வசதியின்மை அடுத்த பிரச்சினையாகும். 'தொலொஸ்வல தோட்டத்தில் 30 தொழிலாளர் குடும்பங்களுக்கு நாண்கு ஏக்கர் காணி வழுங்கப்பட்டிருந்தாலும் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு அவர்களிடம் பண வசதிகள் இல்லை" என்கிறார் மன்சில்மணி.

1930ம் ஆண்டு காலப்பகுதியின் பின்னர் தோட்ட தொழிலாளர்களுக்கு புதிய லயன் அறைகள் நிர்மானிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் தற்போது அதிகரித்துள்ள சனத் தொகையின் காரணமாக வேறு வழியின்றி ஓர் லயன் காம்பராவில் மூன்று அல்லது நான்கு குடும்பங்கள் வசித்து வருகின்றனர். தோட்ட நிர்வாகத்தின் அனுமதியுடனோ அல்லது அனுமதியின்றியோ விடொன்றை கட்டிக் கொண்டாலும் அதனை அவர்களால் உரிமை கொண்டாட முடியாது.

தொழிலாளர்களுக்கு எதிராக சட்டவிரோத குடியிருப்புகள் தொடர்பாக பல வழக்குகள் நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

லயன் அறைகளில் வாழ்கின்ற தொழிலாளர்களுக்கு கிடைக்கின்ற கடிதங்கள் தோட்டத்தின் பெயருக்கே வருகின்றன. அவர்களுக்கென்றொரு முகவரி இல்லை. தபாலில் வருகின்ற கடிதங்கள் முறையற்ற விதத்திலே அவர்களது கைகளுக்குச் சென்றடைகின்றது. ஒரே பெயர் கொண்ட பலர் இருக்கும் சந்தர்ப்பத்தில் உரியவருக்கு கடிதம் பல சந்தாப்பங்களில் கிடைப்பதில்லை. பல சந்தாப்பங்களில் கடிதங்கள் காணாமல் போவதுடன் அதேவேளை மிகவும் தாமதமாக சென்றடைகின்றது. இதன் காரணமாக தொழில் வாய்ப்புக்கள், பரீட்சைகளுக்கு செல்லல்

போன்ற விடயங்களை தவறவிடுவதுடன் அடகு வைத்த பொருட்கள் மீட்கமுடியமல் போகின்ற சந்தர்ப்பங்களும் அதிகமாகும். 'அதனால் எமது லயன் காம்பராக்களுக்கோ அல்லது இலக்கமொன்றுடன் கூடிய விலாசமொன்று பெற்றுத்தாருங்கள்" என அவர்கள் கேட்கின்றனர். ஆனால் தோட்ட நிறுவனங்கள் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.




**பத்தலகொட வெற்றிப்போராட்டம்**

காணியுரிமை கோரிய தோட்ட தொழிலாளர்களின் நீண்ட காலப் போராட்டத்திற்கு அண்மையில் குருணாகல் பத்தலகொட றப்பர் தோட்ட தொழிலாளர்களுக்கு வெற்றி கிடைத்துள்ளது. 10 குடும்பங்களை கொண்டுள்ள பத்தலகொட தோட்டம் 281 ஏக்கர் நிலப்பரப்பளவைக் கொண்டுள்ளது. கடந்த மே மாதம் தோட்டத்தின் ஒரு பகுதியை தனியார் துறை முதலீட்டாளரொருவருக்கு விற்பனை செய்வதற்கு உரிமையாளர்கள் தயாரானபோது உடனே சுதாகரித்துக் கொண்ட தொழிலாளர்கள் பலவந்தமாக காணிகளை பிடித்துக் கொண்டனர். அவை கைவிடப்பட்ட றப்பர் தோட்ட காணிகளாகும். தோட்ட உரிமையாளர்கள் பொலிசாரின் உதவியுடன் அவர்களை வெளியேற்ற முயற்சித்த போது பிரதேசத்தின் விவசாயிகள்-தொழிலாளர்கள் பிரச்சினைகளில் பங்கெடுக்கும் வரலாற்றில் பெயர் பொறிக்கப்படக் வேண்டிய இப்பாகமுவ தேவசரண உட்பட சிவில் சமூகங்களின் தலையீட்டின் காரணமாக அது தடுக்கப்பட்டது.

தோட்டத்தை விற்பனை செய்வதற்கெதிராக வழக்குத் தொடர்வதற்கு முன்வந்த 28 குடும்பங்களுக்கு 10 பர்ச்சஸ் வீதம் காணியை பெற்றுக் கொடுப்பதற்கு இரு தரப்பினரும் இணங்கிக்கொண்ட உடன்படிக்கைக்கமைய தோட்ட உரிமையாளர்கள் காணியை பெற்றுக்கொடுக்க முன்வந்தனர். ஆறு மாதங்களுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் தற்போது வசிக்கின்ற லயன் காம்பராக்களிலிருந்து தொழிலாளர்கள் வெளியேற வேண்டும் தோட்ட நிர்வாகத்தின் நிபந்தனையாகும். போதுமான பண வசதியின்மையால் அவர்களுக்கு தற்காலிக குடியிருப்பை அமைத்துக் கொள்வதில் பெரும் சவாலை எதிர்கொள்கின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் வரை பத்தல கொட தோட்டத் தெழிலாளர்களின் ஒரு நாள் சம்பளம் 750 ரூபாவாக இருந்தது. தேவசரண நிலையத்தின் தலையீட்டின் பின்னர் அவர்களது சம்பளம் ஆயிரம் ரூபாவாக அதிகரிக் கப்பட்டதுடன் கிர யத்துடன் பெற்றுக்கொடுக்கவும் இணகங்காட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப ஊழியர் சேமலாப நிதியை முறையாக பெற்றுக்கொள்வதற்கும் அவர்களால் முடிந்துள்ளது.



தோட்டம் மற்றும் கிராமங்களுக்கிடையில் இருக்கின்ற ஒற்றுமையும் முரண்பாடும் ஈர வலயத்தை அண்டிய பெரும்பாலான தோட்டங்கள் சிங்கள கிராமங்களுக்கு மத்தியிலே அமைந்துள்ளன.

தோட்ட லயன் அறைகளில் வாழ்ந்து கொண்டு தொழிலில் ஈடுபடுகின்ற தமிழ் தொழிலாளர்களுக்கும் வெளியிலிருந்து தோட்டத்திற்கு வேலைக்கு வருகை தரும் சிங்கள தொழிலாளர்களுக்குமிடையில் மிகத்தெளிவான இனப்பரம்பல் காணப்படுகின்றது. ஆகையால் தொழிலாளர்களின் அன்றாட வாழ்விலும் அனைத்து செயற்பாடுகளிலும் கிராமங்களை அண்டிய மக்களின் எண்ணங்கள் மற்றும் செயற்பாடுகள் பெரும் செல்வாக்கை செலுத்துகின்றன. 'மொறத்தன்னை மற்றும் கோணகல்தெனிய என்ற இரு கிராமங்களின் சிங்கள மக்களும் மொறத்தன்னை தோட்ட மக்களுக்கிடையில் மிக நீண்டகால நட்புறவு காணப்படுகின்றது. கிராமத்தின் அனைத்து கலாசார மற்றும் சமய செயற்பாடுகளின் போதும் அதேபோன்று தோட்டத்தின் அனைத்து செயற்பாடுகளின் போதும் இரு தரப்பினரதும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் குறைவின்றி கிடைக்கின்றதென" மிகவும் பெருமையுடன் தெரிவிக்கின்றார். மொறத்தன்னை தோட்டத்தைச் சேர்ந்த தொழிற்சங்க செயற்பாட்டாளரான ரீதியிலான செயற்பாட்டாளரான எ.தேவராஜ்.

தெல்ஹேன - ரத்தல்கொட ரம்பொடகல்ல றப்பர் தோட்ட தொழிலாளர்களின் போராட்டம் அண்மைய காலத்தில் தோட்டம் மற்றும் கிராமத்திற்கிடையில் உருவாகியுள்ள நல்லுறவு நல்லிணக்கத்திற்கு சிறந்த உதாரணம். 45 நாட்கள் நடைபெற்ற இப்போராட்டத்தின் வெற்றிக்கு தோட்டத்தை அண்டிய கிராம மக்கள் வழங்கிய பங்களிப்பு என்றும் சிலாகிக்கத் தக்கது. தோட்ட நிர்வாகத்தினரால் வழங்கப்பட்ட உலர் உணவு நிறுத்தப்பட்ட போது அவர்களின் பசியை போக்கியவர்கள் சுற்றுப்புற கிரமத்தவர்களே. 101 குடும்பங்களைச் சேர்ந்த 544 பேரில் 144 பேர் தோட்டத்தில் பணிபுரிகின்றனர். அதில் 66 பேர் பெண் தொழிலாளர்களாவார்கள். ஐக்கிய ஜனநாயக தோட்ட தொழிலாளர் சங்கம் மற்றும் முற்போக்கு பெண்கள் முன்னணி ஆகிய இரு அமைப்புக்களே இப்போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தனர்.

ஆனாலும் இந்நிலைமை களுத்துறை, இரத்தினபுரி, மொனராகலை, மாத்தறை மாவட்டங்களில் வேறுபட்டு காணப்படுகின்றது. மத்துகம தோட்ட தொழிலாளர்கள் கடந்த காலம் முதல் இன்றுவரை மிகப் பயங்கரமான அனுபவங்களுக்கு முகங்கொடுத்து வந்துள்ளனர்.

'முன்னர் மதுகம, அகலவத்தை, களுத்துறை, போன்ற தொகுதிகளில் கொல்வின், சம்லி, அனில் முனசிங்ஹ போன்ற இடதுசாரி தலைவர்கள் இருந்தனர். தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் அவர்களுக்கே கிடைத்தன. ஆனால் 1977ம் ஆண்டின் பின்னர் நிலைமை மாற்றமடைந்தது. தற்பொழுது பகிரங்கமாக இனவாதம் பேசப்படுகின்றது. பதுரளிய லத்பந்துர சந்தியில் தமிழில் பாட்டொன்றைக் கூட போடவிடமாட்டார்கள்" என பெயர் குறிப்பிட விரும்பாத தொழிலாளியொருவர் தெரிவித்தார்.



# மருதம் பசுமை நகர்

## Marutham Green City

**வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்**




A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி

B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)

C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்

நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km

## உள்ளக வசதிகள்

- நூலகம்
- நீச்சல் தடாகம்
- உணவகம்
- சிறுவர் பூங்கா
- விளையாட்டுத்திடல்
- மீன்பிடி குளம்

**0777 43 55 57**

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.09.2024இல் வெளியிடப்பெற்றது.